[illegible]

5 [illegible]

9-5-1933

N33.5.10
208705

வருட சந்தா ரு. 3 Rgd. No M. 241



23 MAY 1933

# மத்வ மித்திரன்.



# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.






| | | |
|---|---|---|
| Vol. 5 | ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் | No10 |
| | வைசாக மாஸம் | |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (9—5—33.) | நெ10 |


| நெ. | பொருளடக்கம். | பக்கம் |
|---|---|---|
| 1. | துளஸி பூஜை கதை. | 281 |
| 2. | வைசாகமாஸ வைபவம். | 283 |
| 3. | ஸ்ரீதாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 291 |
| 4. | சங்கரலீலா விலாசம் (ஸ்ரீமான் H. சுப்பராவ்) | 297 |
| 5. | மணிமஞ்ஜரி (ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார்) | 299 |
| 6. | சண்டாள சம்பர்க்கம். | 303 |
| 7. | ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே | 307 |
| 8. | செய்தித்திரட்டு. | 311 |
| 9. | விசேஷதினங்கள். | 312 |

ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

# SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

***R. Bindumathava Rao,***
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,

**20 டவுன்ஹால் ரோடு, மதுரை,**

R. ரகூத்தமராவ் மானேஜர்.

ஸ்ரீ உத்தராதிமடம் ஸமஸ்தாநாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகள் அருளிச்செய்த

## ஸ்ரீ கீதாதத்வம் (முதற்பாகம்.)

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கனுதாசாரியாரால் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வம், ஜகத் ஸத்யத்வம், ஜீவப்ரம்ம பேதம் ஜீவர்களின் பாரதந்திரியம் தாரதம்மியங்கள், முக்தி ஸ்வரூபம், ஆகிய இந்த ஐந்து மத்வமத ப்ரமேயங்களைப்பற்றியும் இவைகளுக்கு இதர மதத்தார்களால் முக்யமாய் அத்வைதிகளால் செய்யப்படும் பலவகை ஆக்ஷேபணைகளுக்கு தக்க சமாதானங்களையும் பலவகை திருஷ்டாந்த பூர்வமாய் ஸ்ரீ ப[illegible]த்கீதை வசனங்களைக்கொண்டு அவைகளின் சரியான துவைதபரமான அர்த்தபிசாரத்துடன் கூறப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் சுலோகங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன, உயர்த காகிதத்தில் அச்சாகிவரும் இந்த புஸ்தகம் தற்போது பணம் செலுத்துகிறவர்களுக்குமட்டில் விலை ரூ. 1—8—0. மேற்கண்ட முதல் மூன்று ப்ரமேயங்களடங்கிய 3 சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் வெளியாகி அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தனி சஞ்சிகை கிரயத்திற்கு கொடுக்கப்படமாட்டாது. தற்போது ஆர்டர் செய்கிறவர்கட்கு ரூ. 1-14-0க்கு வி.பி.பி. செய்யப்படும், இதர சஞ்சிகைகள் அவைகள் வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். ஒவ்வொருமாத்வரும் அவசியம் படித்துணரவேண்டிய இப்புத்தகத்திற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர் மாத்வமித்ரன், ஸ்ரீ வியாஸவிலாசம்,
கும்பகோணம்.

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

23 MAY 1933

## துளசி பூஜை கதை.

முன்பு அயோத்தியை ஆண்டுவந்த தசரதன் ஸ்ரீ ஹரிபக்தச்ரேஷ்டனாயிருந்து ஸ்ரீ ஹரிவிரதங்களைத்தவிர வேறு எதையும் செய்யாதிருந்தும் புத்ர பாக்யமேற்படாமல் துக்க ஸமுத்ரத்தில் மூழ்கி பத்னியான கௌஸல்யையிடமறிவித்து சிந்தைப்பட கௌஸல்யை சிந்தை என்பது தகாது; சரீரத்தை உலர்த்தும்; மனப்பிரவிர்த்தியை தடுக்கும்; சத்ருக்களுக்கு இடம் கொடுக்கும்; ஜகந்நாயகனை ஸ்ரீ ஹரியையே விசேஷமாய் ஆராதிப்போம்; மோக்ஷாதி மகாபதவிகளை அளிக்கும் அந்தப்ரபு இந்த புத்ராதி அல்ப பாக்யங்களைத்தரமாட்டாரா என்ன? ஏன் சிந்தைப்படுகிறீரென்று சொல்ல தசரதன் கௌஸல்யை முதலிய பத்னிமார்களுடன் ஸ்ரீ ஹரி சேவையை ஒரு வருஷகாலம் விசேஷமாய்ச்செய்ய பகவான் சங்கு சக்ரதாரியாய் ஒருநாள் அவருடைய சொப்னத்தில் தோன்றி என் கண்ணிலிருந்து பிறந்தவளும் அமிர்த சொரூபியானவளும் லோகமான்யளுமான துளசியை தினம் பூஜித்துவா. பசும்பால் இளநீர் கரும்புசார் முதலியவைகளை துளசி செடிக்கு வார்த்துக்கொண்டு அதை வளரவிடு; பாயஸம் மோதகங்கள் முதலியவைகளை நிவேதனம் செய்து ஆயிரக்கணக்கான நெய்விளக்குகளை ஏற்றி தினம் துளசியை ஆராதனம் செய்; அதுவே எனக்கு வெகு திருப்தி. எனக்கு ஸமானன் நானேயல்லாமல் வேறுயாருமில்லையாதலால் எனக்கு ஸமானமான பிள்ளை வேண்டுமென்று நீ கேட்டதற்காக

...னே உனக்கு மகனாய்ப் பிறக்கிறனென்று சொல்லி மறைந்தார். அதன்படியே தசரதன் மந்திரி ஜனங்களுடன் கலந்து தன் அரண்மனை முன்புறத்தில் பெரிய மண்டபம் கட்டி நடுவில் வேதிகை போட்டு அங்கு துளசியை ஸ்தாபித்து க்ஷீராதிகளை அதற்கு வார்த்து துளசியை ஆராதித்து வந்தான். கௌஸல்யை துளசி மாடத்திற்கு சுற்றிலும் த்வஜம், பத்மம், கண்ணாடி முதலான ரேகைகளுள்ள விசித்ரமான கோலங்கள் போட்டு பரமபக்தியுடன் பூஜித்துவந்தாள். இவ்வாறு ஒருவருடம் ஆராதித்துவர துளசி தேவி அந்த பிருந்தாவனத்தில் ஒருநாள் ப்ரத்யக்ஷமானாள். திவ்ய பீதாம்பரமுடுத்தி, வெண்மையான வஸ்திரம் போர்த்துக்கொண்டு, துளசி மஞ்ஜரிகள் கோர்த்த ஹாரத்தை கழுத்திலணிந்து, விசாலமான கண்களுடனும், வாரிமுடித்துக்கொண்ட நீலகேசபாசங்களுடனும், ஜொலிக்கும் அமூல்யமான இரண்டு கர்ண குண்டலங்களுடனும், பூர்ண சந்திரனை பரிகசிக்கும் முககாந்தியுடனும், திவ்யமான ஒட்டியாணம் தரித்த இடையுடனும், கமல மலர்போன்ற இரு சரணங்களுடனும் கூடியவளாய், நிர்வாபரண பூஷிதையாய் சதுர்புஜயுக்தளாய் ஒருகையில் தாமரை புஷ்பத்தையும் மற்றொரு கையில் நீராம்பல் புஷ்பத்யையும் தரித்தவளாய், ஒருகையால் பக்தர்களை அஞ்சாதே என்று அபயமளிப்பவளாய், மற்றொரு கையால் தன்னை ஆராதிப்பவர்களுக்கு ஸமஸ்த மங்களங்களையும் அளிக்கும் வரதஹஸ்தத்தை காட்டுபவளாய், திவ்யசந்தனம் பூசிக்கொண்டு பலவகை நறுமலர்களால் அலங்கரித்துக்கொண்டவளாய், பார்வதிதேவி, ஸரஸ்வதிதேவி இடது புறத்திலும், ஸ்ரீ தேவி பூதேவி வலது புரத்திலும் ஸேவிக்க, கோடிக்கணக்கான அப்ஸரஸ்ஸுகள் மகாஸ்தோத்திரம் செய்திட, தேஜோமயமான அதியற்புத ரூபத்துடன் லோகமாதாவான துளசி தேவி ஆவிர்பவித்ததைக் கண்டு தசரதமகாராஜன் கௌஸல்யை முதலியோர் பரமானந்த பரிதர்களாய் தண்டம் விழுந்தாப்போல் சாஷ்டாங்கம் நமஸ்கரித்து மகாஸ்தோத்திரம் செய்து தங்களுக்கு புத்ரபாக்யமேற்படும்படி வேண்டிக்கொண்டனர். துளசிதேவி மகிழ்ந்து புன்சிரிப்புள்ள வதனத்தைக்காட்டிக்கொண்டு ராஜனே! உன் பக்தியை மெச்சினேன். என் துளசி காஷ்டத்தை உபயோகித்து புத்ரகாமேஷ்



# வைசாக மாஸ வைபவம்.

## வைசாக தர்மங்கள்,

எல்லா மாஸங்களில் கார்த்திகை மாஸமும் அதைவிட மாகமாஸமும் அதைவிட வைசாகமும் சிரேஷ்டமென்று சொல்லப்படுகின்றது. ஏனெனில் இந்த மாஸத்தில் ஸுலபமான சில தருமங்கள் சொல்லப்பட்டு அவைகளுக்குவிசேஷமான பலன்கள் ஏற்படுவதாய் சொல்லப்பட்டிருக்கிறது. பகவான் ஸ்ரீ நாராயணன் ஜகத் சிருஷ்டி செய்து நான்கு வர்ணங்களை ஏற்படுத்தி அவைகளுக்குற்ற தர்மங்களை அவருடைய ஆக்ஞாரூபமான வேதம் பாஞ்ராத்திரம் இதிஹாஸம் புராணாதிகளால் வெளியிட்டு அவைகளை மகரிஷிகளைக்கொண்டு உலகில் பிரசாரம் செய்வித்து எங்கும் தர்மம் நடந்துவரும்படி செய்தார். தான் சொன்ன தருமங்களை ஜனங்கள் வெகு சிரத்

---

டியைச்செய். ஸ்ரீ ஹரியைக்குறித்து என் பிருந்தாவனத்திற்கெதிரில் ஓர் ப்ரம்மசாரிக்கு தினம் பாயாஸன்னத்தை போஜனம் செய்வித்துவா. அதனால் பகவான் நாராயணர் மகிழ்ந்து அவரே உன் குமாரராய் பிறப்பாரென்று சொல்லி அந்த பிருந்தாவனத்திலேயே அந்தர்தானமடைந்தாள். அதன்படியே தசரதன் துளசி காஷ்டத்தை ஏராளமாய் சேகரித்து அதைக்கொண்டே புத்ர காமேஷ்டி யாகத்தைச்செய்ய ஸ்ரீ நாராயணனே ராமலக்ஷ்மண பரத சத்ருக்னர்களென தசரதனுக்கு மக்களாய் பிறந்தார். தசரதன் ஸமஸ்த ஸுகங்களையுமனுபவித்து வைகுண்டம் சென்றான். பிரதிதினம் ஸாயங்காலமும், சுக்ரவாரம், ஸங்கிரமணகாலம், கிரஹண புண்யகாலம், ராமநவமி, மகாநவமி முதலான விரத தினங்கள், ஏகாதசி, த்வாதசி முதலான புண்யதிதிகளில் துளசியின் மகிமை கோடிமடங்கு அதிகமானது. துளசி பூஜை செய்துவந்தால் மக்களில்லாதவர்களுக்கு மகப்பேறும், ஸ்திரீயில்லாதவர்களுக்கு ஸ்திரீபாக்யமும், வித்யையில்லாதவர்களுக்கு வித்யா ஸம்பத்தும், சொத்துயில்லாதவர்களுக்கு சொத்தும், க்ஷத்ரியனால் சத்ருஜயமும், வைசியனுக்கு வியாபார விருத்தியும், பிராம்மணனுக்கு ஞானவிருத்தியும், சூத்திரர்களுக்கு ஈசுவரபக்தியும், ஸ்திரீ ஜனங்களுக்கு ஸௌபாக்யமுமுண்டாகும்.

தையாய் நடத்திவருவதை தான் நேரில் பார்த்து மகாலட்சுமிக்கும் காட்ட பகவான் எப்பொழுது வெளியே போய் வருகிறதென்று யோசிக்கும் பொழுது மற்ற வர்ஷாதி ருதுக்களில் எல்லாவகை அனுகூலமில்லாமல் ஆங்காங்கு சிற்சிலரே சில தர்மங்களை செய்வார்கள்; சிலர் செய்யமாட்டார்கள்; அதை நாம் பார்ப்பதும் அதற்காக தண்டிப்பதும் நியாயமல்லவென்று யோசித்து வஸந்தகாலமாகிய இந்த வைசாகம் ஸமஸ்த வஸ்துக்களுடன் தர்மம் செய்ய அனுகூலமான காலமென்றும் எங்கும் தர்மம் நடந்துவருகிறதென்றும் அதை ஆனந்தமாய்ப்பார்த்து மகாலட்சுமிக்கு காட்டலாமென்றும், அனுகூலமிருந்து தன் ஆக்ஞையைச்செய்யாதவர்களை பலமாய் சிக்ஷிக்கலாமென்றும் நிச்சயித்து மகாலட்சுமியுடன் பகவான் நாராயணன் சஞ்சரித்து வரும்காலம் இதுவாகும். வைசாகத்தில் சூரியோதயத்திற்கு முன்பு ஸ்நானம் செய்யவேண்டும். சூரியோதயமாய் 6-நாழிகை வரை ஒரு சிறு ஜலாசயத்திலும் கங்காதி மகாநதி அபிமானி தேவர்கள் ஸந்நிஹிதர்களாய் ஸ்நானம் செய்பவர்களுக்கு புண்யங்களைத்தர காத்திருந்து புண்யங்களைத்தருகின்றனர். ஸ்நானம் செய்யாதவர்களை சபித்துச்செல்கின்றனர். திருடாங்கனும் ரோகமில்லாதவனும் அனுகூலமுள்ளவனும் வீட்டில் ஸ்நானம் செய்யலாகாது. அப்படி ஸ்நானம் செய்தால் சண்டாளனாய்ப்பிறப்பான். நூறு ஜன்மம் நாயாகவும் பிறப்பான். வெளியேபோய் ஸ்நானம் செய்ய அனுகூலமில்லாதவன் கிணற்றில் ஸ்நானம் செய்யலாம். கிணற்றில் வைசாகஸ்நானம் செய்தால் இந்த ஜன்மத்தின் பாபங்கள் மட்டில் தொலையும். தேவர்களால் நிர்மிதமானதில் ஸ்நானம் செய்தால் ஜன்மாந்தர பாபங்களும் தொலையும். நதியில் ஸ்நானம் செய்தால் மூன்று ஜன்ம பாபமும், ஸமுத்ரத்தைச் சேரும் நதியில் ஸ்நானம் செய்தால் ஏழுஜன்மங்களின் பாபமும், கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, காவேரி, நர்மதை, கிருஷ்ணவேணி ஆகிய இந்த ஸப்த கங்கைகளில் ஸ்நானம் செய்தால் கோடி ஜன்மபாபமும் தொலையும். வைசாகத்தில் ஸ்நானம் செய்ய வெளியே புறப்பட்டால் ஒவ்வொரு அடிக்கும் அச்வமேதயாகம் செய்த பலன். வைசாக ஸ்நானத்தை சூரியோதயத்திற்கு முன்பு செய்து ஆன்ஹிகங்களை செய்து கொண்டவனிடம் லக்ஷ்மீநாயகனான ஸ்ரீ நாராயணர் பரமப்ரீதி அடைகிறார். வைசாகத்தில் ஜலத்தைத் தந்தால் எல்லா தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த புண்யமும் எல்லாதானமும் செய்தபலனும் கிடைக்கும். தண்ணீர் பந்தலைப் போட்டால் அவனுடைய கோடி குலமுத்தாரமடையும். வழி நடந்து சிரமமுள்ளவனுக்கு நிழலைத்தந்து சிரமத்தைப்போக்கினால் அவன் மும்மூர்த்திகளுக்கும் பிரியனாகி தேவர்கள் ரிஷிகள் பித்ருக்கள் இவர்களை



திருப்தி படுத்துகிறான். தாகமுள்ளவனுக்கு வைசாகத்தில் ஜலம் தந்தால் பதினாயிரம் ராஜஸூயயாகம் செய்த பலன். வழி நடந்து சிரமப்பட்டவனுக்கு விசிறினால் பாபம் விலகி கருட பதவி வரும். பிராம்மணர்களுக்கு விசிறியைத்தந்தால் பிரம்மலோகம் வரும். தாராதிருந்தால் பலதினுசகளான வாயுரோகங்கள் பாதிக்கும். குடையைத்தந்தால் ஆத்யாத்மிகாதி தாபங்கள் தொலையும். தாராதிருந்தால் நிழலற்ற காட்டில் பிசாச ஜன்மம் வரும். வைசாகத்தில் அன்னதானம் செய்தால் அதன் புண்யம் பிரம்மாவாலும் கூட சொல்ல மாளாது. பாதுகையை தானம் செய்பவன் யமலோகம் போகாமல் விஷ்ணு லோகம் போவான். வைசாகத்தில் சய்யாதானம் செய்து பிராம்மணன் ஸுகமாய் படுத்தால் அவன் இந்த ஜன்மத்திலேயே ஸமஸ்த போகங்களை அனுபவித்து அவன் வம்சம் விருத்தியாகி ரோகாதிகளில்லாமல் ஆயுஸ் ஆரோக்யம் யசஸ் தைரியம் இவைகளைப் பெற்று அவனுடைய வம்சத்தில் அதார்மிகர்கள் பிறக்காமல் நூறு தலைமுறை சகல போகங்களை அநுபவித்துவிட்டு முக்தியடைவான். பாயைத்தந்தால் ஸம்ஸாரபந்தம் விலகும். கம்பளத்தை தந்தால் அபமிருத்யு நிவருத்தி. மெல்லியதான வஸ்திரம் தந்தால் பூர்ணாயுஸ். பச்சை கர்ப்பூரம் தந்தால் துக்க நிவிருத்தி. குங்குமப்பூ தந்தால் எல்லா ஜனங்களுக்கும் பிரியனாகி சக்ரவர்த்தியாவான். சந்தனம் தந்தால் தாபத்ரயமும் விலகும். ஜலத்திற்கு வாஸனையைக்கொடுக்கும் விளாமிச்சம் வேர் முதலியவைகளைத்தந்தால் பாபநிவர்த்தியாகும். மல்லிகைப்பூ தாழம்பூ முதலிய புஷ்பங்களைத்தந்தால் மோக்ஷம் கிடைக்கும். தேங்காய் பாக்கு இவைகளைத்தந்தால் ஏழுஜன்மமாய் தரித்திரனாயிருப்பவன் வேதவேதாங்கபாரங்கதனாய் தனவானாகி ஏழுகுலத்தாருடன் விஷ்ணு லோகமடைவான். ப்ராம்மணனின் வீட்டில் பந்தலைப்போட்டு தந்தால் அவனுக்கு ஏற்படும் புண்ணியம் சொல்லி மாளாது. ரஸ்தாக்களில் தோப்பு குளம் மண்டபம் முதலியவைகளை நிர்மாணம் செய்தால் அவனுக்கு புத்ராதி ஸந்ததிகளேன்? ஜலதானம் அன்னதானம் அசுவத்தவிருக்ஷம் பயிரிடுதல் சத்சாஸ்திர சிரவணம் தீர்த்த யாத்திரை ஸாது ஸமாகமம் புத்ரன் என்று ஸந்தானம் பரலோகத்திற்கு ஸாதன மானது ஏழுவகை. நல்ல வாசனை ஸாமான்களுடன் கூடிய தாம்பூலத்தை தந்தால் இந்த ஜன்மத்தின் பாபங்கள் தொலைவதுடன் யசஸ், தைரியம் ஸ்ரீ இவைகளை அடைவான். ரோகிஷ்டன் தந்தால் ரோக நிவிர்த்தி. ரோகமில்லாதவன் தந்தால் மோக்ஷபதவி கிடைக்கும். கோடைகாலத்தில் உப்பு எலிமிச்சை ரஸம் சேர்த்த நீர்மோர் தானத்திற்கு ஸமானமான தானமில்லை. வித்யாவானாயும் தனவானாயுமாகி மோக்ஷமடைவான். தயிரைத்தந்தால் அநந்த பலன்.

அரிசியைத்தந்தால் பூர்ணாயுஸ்ஸையும் ஸர்வயக்ஞங்கள் செய்த பலனையுமடைவான். பசும்நெய் தந்தால் அசுவமேதயக்ஞம் செய்தபலன் வெள்ளரிப்பழம் ரஸாயனத்தை தந்தால் எல்லா பாபங்களும் விலகி சுவேதத்வீபத்தில் வசிப்பான். ஸாயங்காலத்தில் பானகம் தந்தால் எல்லா பாபங்களும் விலகி விஷ்ணுஸாயுஜ்யம் கிடைக்கும். பழங்களுடன்பானகத்தைதருவது பித்ருக்களுக்கு அமிர்தபானமாகும். கந்தம், மூலம், பலம், காய், உப்பு,வெல்லம் ஜலம் மோர் வைசாகத்தில் எதைத்தந்தாலும் புண்ய பலன் அனந்தமானது.நாம் கொடுக்காமலிருந்தால் தேவர்களும் எங்களுக்கு கொடுக்கமாட்டார்கள். அதனால் தாரித்ரியமேற்படுகிறது.தாரித்ரியம் ஏற்பட பாபகர்மங்கள்தான் செய்யப்படுகின்றன. பாபத்தால் நரக மேற்படுகிறது.நரகவாஸமானபின் மீண்டும் தரித்திரனாய் பிறந்து பாபகர்மாவே செய்யப்படுகிறது ஆகவே இத்தகைய புண்ணியகரமான மாதத்தில் தரித்திரனோ பணக்காரனோ அவனவனுக்கு கிடைக்கக்கூடிய மேற்கண்ட ஸ்வல்பமூல்யங்களுள்ள வஸ்துக்களைத்தந்தாலும் அந்த தர்மம் பன்மடங்காய் ஆலவிதைப்போல் விருத்தி யடைகிறது. தபஸ்ஸு, யக்ஞம் தானம், ஹோமம், தீர்த்தயாத்திரை, ஹவனம், உத்யாபனம் எதும் இந்த மாஸத்தில் மகாபலனைத்தருகிறது. ஸுலபமாய் கிடைக்கும் தண்ணீரைத்தந்தாலுமே பதினாயிரம் ராஜஸூயயாகபலனென்றால் இந்த மாஸத்தின் பலன் அபாரமென்று சொல்லவும் வேண்டுமோ? இக்ஷ்வாகு வம்சத்து ஹேமாங்கதராஜன் தண்ணீர் ஒரு விலையுயர்ந்த பதார்த்தமா? அதைத்தந்தால் என்ன பலன்? விலையுயர்ந்த தங்கம், பூமி, பசு முதலியவைகளைத் தந்தாலும் புண்டமிருக்கலாம், அதையும் பரமதரித்திரர்களுக்கும் அநாதர்களுக்கும் கண்காது கைகால் இல்லாத அங்கஹீனர்களுக்கும் தந்தால் பிரயோஜனமுண்டு. திருடாங்கஸ்தர்களாய் பலவகை சௌகர்யங்களையும் கொண்ட ஞானவான்களைத் தேடி அவர்களுக்கு என் இந்த தானங்களைச் செய்யவேண்டுமென்று குருட்டு புத்தியைக்கொண்டு குலகுருவான வசிஷ்டர் என்ன சொல்லியும் கேளாமல் அவ்வாறே உதகதானத்தை செய்யாமல் ஞானவான்களை வெறுத்திருக்க அவனை மகாபாபங்கள் தொடர்ந்து பலகாலம் நரகயாதனை அனுபவித்து பிறகு மூன்று ஜன்மம் சாதக பக்ஷியாகவும் ஒரு ஜன்மம் கழுகாயும் ஏழுஜன்மம் நாயாகவும் பிறந்து பிறகு இருபத்திஎட்டு ஜன்மம் பல்லியாகப்பிறக்க முதலில் விதேஹ தேசத்திய சுருதகீர்த்தி ராஜனின் வீட்டில் பல்லியாகப்பிறந்தான். வைசாகத்தில் மத்தியான்ஹ காலத்தில் அதிதியாய்வந்த சுருததேவப்ராம்மணரின் காலலம்பிய ஜலம் இதன்மேல்



விழவும்,அதற்கு ஞானோதயமாகி தான்செய்த கணக்கில்லா கோதானங்கள் ஸுவர்ணதானம் பூதானம் இவைகளுக்கு பலன் கிடைக்காமல் இந்த பாபயோனிகள் கிடைத்து கஷ்டப்படுவதற்கு காரணமென்னவென்று கேட்க குருடர்கள் பதினாயிரம்பேர் இருந்தால் மட்டில் கண் தெரியுமா? அக்னியைவிட்டு சாம்பலில் ஹோமம் செய்தால் பலனுண்டா? ஞானவான்களையும் வேதவித்துக்களையும் விட்டு எண்ணிறைந்த அமூல்யமான தானங்களை நீ செய்திருந்தாலும் நீ உதக தானம் செய்யாததால் எல்லாம் நிஷ்பலமானதுடன் மகாபாபகரமான ஜன்மங்களை நீ அடைந்திருக்கிறாய். உனக்கு ஸத்கதி ஏற்பட ஓர் உபாயம் செய்கிறேனென்று அந்த சுருததேவ ப்ராம்மணர் தான் தினம் வைசாக ஸ்நானம் செய்த ஒருநாள் பலனை தத்தம் செய்தார். அதனால் அவர் அந்த ஜன்மாவை விட்டு திவ்ய சரீரமுள்ளவராய் விமானமேறி ஸ்வர்க்கம் சென்று வெகுகாலமங்கிருந்து பிறகு பூமியில் இக்ஷ்வாகு குலத்தில் ககுஸ்த ராஜனென்று மகா தார்மிஷ்ட சக்ரவர்த்தியாய் பிறந்தார். அவரால் தான் அந்த வம்சத்தில் பிறந்த ஸ்ரீ ராகவனுக்கு காகுஸ்தரென்று பெயரேற்பட்டது. இந்த வைசாக தர்மங்களை ஒருவன்செய்தால் யமலோகம் செல்லாமல் தன் வம்சத்தார்களுடன் வைகுண்டம் செல்கிறான். கீர்த்திமானென்ற அரசன் வசிஷ்டரின் உபதேசத்தால் தன் தேசத்தில் எட்டு வருஷம் முதல் எண்பது வருஷத்திற்குள்பட்டவர்கள் வைசாகத்தில் ப்ராத ஸ்நானம் செய்ய ஆங்காங்கு அதிகாரிகளை வைத்து வைசாக தர்மம் சரிவர நடைபெறும்படி செய்ய பூமியிலுள்ளோரெல்லோரும் வைகுண்டம் போய் யமலோகம் பாழடைய, யமன் மகா கோபங்கொண்டு அந்த அரசனைக்கொல்ல மஹிஷாரூடனாய் மகா சைனியங்களுடன் யுத்தத்திற்கு வந்துசேர,பகவானுடைய சக்ராயுதம் கீர்த்திமானைக்காப்பாற்றி விடவும்,மகாதுக்கமடைந்து யமதர்மன் சதுர்முகனிடம் முறையிட்டு அவருடன் க்ஷீராப்திக்கு சென்று ஸ்ரீஹரியின் காலில் விழவும் பகவான் வைசாகதர்மங்கள் தனக்கு மிகுந்த பிரியத்தை கொடுக்கிறவைகள்:அவைகளைச்செய்பவர்கள் என்னுடைய லோகத்திற்கு செல்வார்களேயன்றி உன் உலகம் வரமாட்டார்கள். நீ வருத்தப்படாதே உனக்கு அந்த தர்மத்தில் ஓர் பாகம் வரும்படி ஏற்பாடு செய்கிறேனென்று அந்த புண்ணியத்தின்ஓர்பாகத்தை யமதர்மனுக்கு தத்தம் செய்யும்படி ஏற்பாடு செய்தார். ஆகவே இந்த தர்மங்களில் தேவரிஷி பித்ருயமதர்மாந்தர்கத வைசாக மதுஸூதனு என்று யமதர்ம ராஜனுடைய பெயர் சொல்லப்படுகிறது. இந்த மாதத்தில் பகவானை துளசியால் அர்ச்சித்தால் புனர்ஜன்மமில்லை. அசுவத்தப்ரதக்ஷிணம் செய்து அதன் வேரில் ஜலத்தை வார்த்தால் பத்தாயிரம் குலம் உத்தாரமடையும்.

## அக்ஷயத்ருதியை.

வைசாக சுத்தத்ருதியை அக்ஷயத்ருதியை எனப்படும். அன்று ப்ராத ஸ்நானம் செய்து தேவரிஷி பித்ரு தர்பணாதிகளைச் செய்து ப்ராம்மண போஜனம் செய்யவேண்டும். உதகும்பதானாதிகள் மகாபலனைத்தரும். ஒருஸமயம் மகேந்திரன் பாதாளம் சென்று பலிசக்ரவர்த்தியை நிக்ரஹித்து மார்க்கத்தில் பூலோகத்தில் மகா ரூபலாவண்யமுள்ள உதத்யரின் பாரியாளுடன் பலாத்காரமாய் சுகிக்க, அவள் கர்ப்பிணியாயிருந்ததால் அவளுடைய கர்ப்பத்திலிருந்த குழந்தை தன் காலால் மகேந்திரனின் அந்த அதிக்ரமத்தை தடுக்கவும், மகேந்திரன் கோபம் கொண்டு அந்த குழந்தை குருடனாகப்போக சாபம் கொடுக்கவும், உடனே தீர்க்கதப ஸென்ற மகரிஷி மகனாக பிறக்கவும், மகரிஷியின் சாபம் ஏற்படுமோவென்று பயந்து மகேந்திரன் விரைவாய் ஓடி மேருபர்வதத்தின் குகையில் பலகாலம் பதுங்கிக்கிடந்தான். தேவர்கள் ஸ்வர்க்கத்திற்கு வரும்படி இந்திரனைப் ப்ரார்த்தித்ததற்கு பரஸ்திரீ ஸங்கம் செய்ததால் தன் பலம் வீரியம், யசஸ் மந்திரசக்தி, சாஸ்திரசக்தி, வித்யாசக்தி எல்லாம் போய்விட்டதாயறிவிக்க பிரஹஸ்பதியின் யோசனையின் பேரில் இன்று ஸ்நானம் தானாதிகளைச்செய்யவும் எல்லா சக்திகளுமேற்பட்டு பரஸ்திரீ ஸங்கம தோஷம் நிவிர்த்தியாகி முன்போலானன். இந்நாளில் செய்த தானாதிகள் அக்ஷயமாவதால் அன்று முதல் இந்நாள் அக்ஷய திருதியை என்று வழங்கப்படுகிறது. பகவான் பரசுராம அவதாரம் செய்த நாளும் இன்றே. வைசாக மாஸம் சுக்லபக்ஷம் த்ருதியை புனர்வஸு நக்ஷத்திரத்தில் இரவு முதல்யாமத்தில் ஆறு கிரஹங்கள் உச்சமாயிருக்கும் பொழுது ஜமதக்னி ரிஷியின் பாரியாளான ரேணுகாதேவியாரிடத்தில் பரசுராமரென பகவான் ஸ்ரீ நாராயணன் அவதரித்தார். த்ரேதா யுகம் பிறந்த நாளும் இன்றேதான்.

## கங்கா ஜன்மம்.

வைசாக சுத்த சப்தமியன்று கங்கையின் உற்பத்தி கொண்டாடப்பட்டு கங்கைக்கு பூஜாதிகள் செய்யப்படவேண்டும். பகீரத ராஜனுடைய ரதத்தின் பின்னே போய்க்கொண்டிருந்த கங்கை வழியிலிருந்த ஜன்ஹு மகரிஷியின் யக்ஞ சாலையை மூழ்க வைக்கவும் மகரிஷி கோபம் கொண்டு அவளை ஆசமனமாய் ப்ராசனம் செய்துவிட்டார். பகீரதனின் ப்ரார்த்தனையின் பேரில் இன்று அவளை அவர் தன் காது வழியாய் வெளியேவிட அவள் இன்றைக்கும் உலகத்தை பாவனமாக்கிக்கொண்டு ப்ரவகித்து வருகிறாள். ஆகவே கங்கை ஜான்ஹவி எனப்படுகிறாள்.

(இதன் தொடர்ச்சியை 297-ம் பக்கம் பார்க்க.



## த்வாதசி.

வைசாக சுத்த த்வாதசியின் மகிமை அபாரமானது. இன்று ப்ராம்மணபோஜனம் செய்வித்தால் ஒவ்வொரு கவளத்திற்கும் கோடிப்ராம்மண போஜனம் செய்த பலனுண்டு. இன்று பகவானுக்கு க்ஷீராபிஷேகம் செய்தால் ராஜஸூயம், அசுவமேதம் செய்த பலன். பஞ்சாமிர்தாபிஷேகம் செய்தால் விஷ்ணுலோகம் கிடைக்கும். அன்று மாலையில் பானகம் தந்தால் புராதனமாயிருந்த பாபங்களும் தொலையும். காஷ்மீர தேசத்திய மாலினி என்பவள் பர்த்தாவை த்ரோகம் செய்து விபசாரியாயிருந்து முடிவில் புழுத்த நாயாய் பிறந்து வருந்திக்கொண்டிருக்க பத்மபந்து என்பவள் இந்த த்வாதசி வ்ரதம் செய்தபலனைத் தந்ததால் திவ்ய அப்ஸரஸ்ஸாகி ஸ்வர்க்கம் சென்றாள்.

## அந்த்ய புஷ்கரணி ஸ்நானம்.

வைசாக சுத்த த்ரயோதசி சதுர்தசி பௌர்ணமி மூன்று நாட்களும் அந்த்ய புஷ்கரணி எனப்படும். வைசாகஸ்நானம் ஸம்பூர்ணமாய் செய்யமுடியாதவர்கள் இம்மூன்று நாட்களில் ஸ்நானம் செய்தால் அந்த பலன் கிடைக்கும். வெளியிலுள்ள எல்லா ஜலாசயங்களிலும் தீர்த்தாபிமானி தேவர்களெல்லோரும் த்ரயோதசியன்று எல்லா தேவதைகளுடனும், சதுர்தசியன்று எல்லா யக்ஞங்களுடனும், பௌர்ணமியன்று ஸாக்ஷாத் ஸ்ரீஹரியுடனும் நின்று மகா பலன்களைத் தருகின்றனர். வைசாக சுத்த ஏகாதசியன்று, தேவாஸுரர்கள் க்ஷீரஸமுத்ரத்தை மதனம் செய்யும்பொழுது அமிர்தமுண்டாக பகவான் மோகினி அவதாரம் செய்தார். த்வாதசியன்று பகவான் அதை பிறர் கொண்டுபோகாதபடி ஸம்ரக்ஷித்தார். த்ரயோதசியன்று அமிர்தத்தை தேவர்களுக்கு பரமாறி அவர்களுக்கு அமிர்தபானம் செய்வித்தார். சதுர்தசியன்று தேவ விரோதிகளான அஸுரர்களை ஸம்ஹாரம் செய்தார். வைசாக சுத்த பௌர்ணமியன்று தேவர்களுக்கு ஸாம்ராஜ்ய பதவி கிடைத்து ஜகத்திற்கே பரமானந்தம் உண்டாயிற்று. ஆகவே இம்மூன்று நாட்களுக்கு தேவர்கள் மகா வரன்களைக் கொடுத்திருக்கின்றனர். இம்மூன்று நாட்களிலும் வெந்நீரில் ஸ்நானம் செய்யும் திருடாங்கஸ்தர்களுக்கு ரௌரவாதி நரகமே வரும். இம்மூன்று நாட்களில் கீதாபாராயணம் செய்தால் ஒவ்வொருநாளும் அசுவமேதயாகம் செய்தபலன். விஷ்ணுஸஹஸ்ரநாமம் பாராயணம் செய்து க்ஷீராபிஷேகம் செய்தால் விஷ்ணுலோகம். வைசாக சுத்த ஏகாதசியன்று அமிர்தமுண்டானதாய் ஸ்காந்தத்தில்

ஸ்பஷ்டவாக்யமிருப்பதால் நிர்ணயரத்னமென்னும் தர்மசாஸ்திரத்தில் வைசாக சுத்த த்விதியையன்று பகவான் கூர்மாவதாரம் செய்ததாய் சொல்லப்பட்டிருப்பது பொருந்துகிறதெனலாம். ஆகவே கூர்மஜயந்தி அன்றே ஆகும்.

## வேதவியாஸ ஜயந்தி.

வைசாக சுத்த த்ரயோதசியன்று பகவான் ஸ்ரீநாராயணர் யமுனா த்வீபத்தில் பராசரபுத்திரராய் மத்ஸ்யகந்தி எனப்படும் ஸத்யவதி தேவியிடமிருந்து ஸ்ரீவேதவியாஸரென்று ஆவிர்பவித்தார்.

## நரஸிம்ஹ ஜயந்தி.

வைசாக சுத்த த்ரயோதசி ஸோமவாரம் ஸ்வாதி நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஸாயங்காலத்தில் பகவான் ஸ்ரீஹரி தன் பக்தனுடைய வாக்யத்தை ஸத்யமாக்கவும் எங்கும் தான் வியாப்தனாயிருப்பதை அறிவிக்கவும் ஹிரண்யகசிபுவின் ஸபாஸ்தம்பத்தினின்றும் ஸ்ரீநரஸிம்ஹராய் ஆவிர்பவித்து அவனைப் பிளந்து பதினான்குலோகங்களின் கஷ்டத்தைப்போக்கினார். இந்த நரஸிம்ஹஜயந்தி விரதத்தைச் செய்கிறவர்களுக்கு பிரம்மஹத்யாதி மகாபாபங்கள் தொலைகின்றன. அவரவர்களின் ஸம்பிரதாயப்படி நரம்ஸிம்ஹஜயந்தியைக் கொண்டாடவேண்டியது மிகவும் அவசியம். இல்லாவிடில் ஆசந்திரார்க்கம் நரகவாஸமுண்டென்று எச்சரிக்கைச் செய்யப்பட்டிருக்கிறது.

## பௌர்ணமி.

வைசாக சுத்த பௌர்ணமியன்று வைசாகஸ்நானம் பூர்த்தியடைகிறது. சூரியோதயத்திற்கு முன்பு ஸ்நானம் செய்யவேண்டும். ப்ராசீனர்கள் ஆகார்மாவை என்பதுண்டு. அப்படி என்றால் ஆ ஆஷாடம் கா கார்த்திகம் மா மாகம் வை வைசாகம் இந்த பௌர்ணமிகளில் ஸ்நானம் மகாவிசேஷமென்று பொருள். இன்று யமனுடைய ப்ரீதிக்காக தத்யோதனத்தை தானம் செய்யவேண்டுமென்று பகவான் விதித்திருக்கிறார். உதகும்பதானம் விதிக்கப்பட்டிருக்கிறது.

## விசேஷ ஸம்பவங்கள்.

வைசாக பஹுளத்ரிதியையன்று நாரதரும், ஸப்தமியன்று நம்புருவும், நவமியன்று தத்தாத்ரேயரும், அமாவாசையன்று சனீசுவரரும் பிறந்தனர்.

ஆகவே இந்த வைசாகமாஸம் பலவகைகளிலும் மகாபுனிதமானது.

---



ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்:

பதினேழாவது அத்யாயம்.

(காபிரைட் முன் தொடர்ச்சி.)

(ஸ்ரீமவே பாகவத ரங்கநாதாசாரியார் மொழி பெயர்ப்பு.)

---

இந்த யுத்தத்தில் ஒருவனையும் பாக்கிவைக்கவில்லை. ஹம்ஸன் ஒருவனே மகத்தான அஸ்திரங்களைப் பிரயோகம் செய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு வந்தான். ஸ்ரீகிருஷ்ணர் அந்த ஹம்ஸனுடைய எல்லா அஸ்திரங்களையும் தடுத்து தன்னுடைய வைஷ்ணவாஸ்திரத்தை எடுத்துக்கொண்டார். ஸ்ரீகிருஷ்ணர் வைஷ்ணவாஸ்திரத்துடனுள்ள பாணத்தை தூக்கியதைப்பார்த்து ஹம்ஸன் ரதத்தினின்றும் பூமியில் குதித்து பயத்தால் ஓடினான். யமுனாநதியின் ஜலத்தில் விழுந்தான். வைஷ்ணவாஸ்திரம் தரித்த ஸ்ரீகிருஷ்ணர் ஹம்ஸனின் பின் ஓடிவந்து ஜலத்தில் விழுந்த ஹம்ஸனை தன் காலால் அவனுடைய சிரஸ்ஸில் உதைத்தார். அந்த ஹம்ஸன் மூர்ச்சையுடன் யமுனா நதியில் இருந்த பெரிய ஸர்பத்தின் வாயில் விழுந்தான். அந்தம் தமஸ்ஸை அடைந்தவன் எப்படியோ அப்படி மகாதுக்கமுள்ளவனாய் தார்த்தராஷ்டிரனென்ற ஸர்பத்தின் வயிற்றில் ஹம்ஸன் வசித்தான். இந்த வைவஸ்வத மன்வந்தரம் முடிந்தபின் ஹம்ஸன் பிராணனை விடப்போகிறான். பிராணனை விட்டபின் கிருஷ்ண த்வேஷியான ஹம்ஸன் நிச்சயமாய் அந்தம்தமஸ்ஸை அடையப் போகிறான். ஹம்ஸன் ஜலத்தில் விழுந்தவுடன் அவனுடைய தம்பியான டிபிகன் தமையனான ஹம்ஸனைத்தேடிக்கொண்டு யமுனா ஜலத்தில் விழுந்தான். பலராமரை விட்டு டிபிகன் ஜலத்தில் மூழ்கி ஹம்ஸனை எவ்வளவு தேடியும் காணவில்லை. அந்த துக்கத்தால் டிபிகன் தன்னுடைய நாக்கைப்பிடுங்கி சரீரத்தை விட்டு க்ரூரமான அந்தம்தமஸ்ஸை அடைந்து அதன் வாசலில் அண்ணனான ஹம்ஸனின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு க்ரூரமான ஸ்வரூபபூதமாயுள்ள துக்கத்தை அனுபவித்தான். பிறகு

பலராமருடன் கூடிய கிருஷ்ணர் யாதவ ஸைனியங்களுடன் ச்ரேஷ்டர்களான துர்வாஸாதிகளாலும் கூடியவராய் ப்ரம்மருத்ராதிகளால் துதிக்கப்பெற்றவராய் த்வாரகா நகரத்தை ப்ரவேசம் செய்தார். நித்யமான நிர்துஷ்டமான ஆனந்தத்திற்கு ஸமுத்ரரான ரமாபதியான ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய தளிர்போன்ற பாதங்களை ஆசிரயித்த பக்த ஜனங்களை ஆனந்தப்படுத்திக்கொண்டு அவருடைய அரண்மனையில் வசித்தார்.

ஸ்ரீமத் ஆநந்த தீர்த்த பகவத்பாதாளியற்றிய ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயத்தில் பதினேழாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து:

---

## பதினெட்டாவது அத்யாயம்.

---

### பீமசேனரின் குணாதிசயங்கள்.

பரசுராமரிடமிருந்து த்ரோணாசாரியார் கற்றுக்கொண்ட திவ்யாஸ்திரங்களை ராஜகுமாரர்கள் அப்யாஸம் செய்துவந்தபொழுது எல்லா ராஜகுமாரர்களிலும் அர்ஜுனன் ச்ரேஷ்டனானான். ஸர்வக்ஞரான பீமசேனர் இருக்க அர்ஜுனன் அஸ்திரக்ஞர்களில் ச்ரேஷ்டனென்பது எப்படி என்றால் பீமசேனர் தன்னுடைய சொரூப ஞானத்தால் அர்ஜுனனைவிட அதிகமாய் எல்லா அஸ்திரங்களையும் அறிந்திருப்பினும் அவர் அஸ்திர யுத்தம் மோக்ஷ ஸாதனமான தர்மமென்று எண்ணவில்லை. அஸ்திர மந்திரங்களால் தேவதைகளைப் பிரார்த்திப்பது பகவத் ப்ரீதிகரமான தர்மமாகாது. பகவத்விஷயகமான ஞானம் அவருடைய பக்தி பகவத் ப்ரஸாதம் ஆகிய இம்மூன்றைத்தவிர வேறு எந்த ப்ரயோஜனத்தையும் பகவானிடமிருந்து விரும்பத்தக்கதில்லை. இப்படியிருக்க இதர தேவர்களிடமிருந்து விரும்பக்கூடியதில்லை என்று சொல்லவும் வேண்டுமோ. அஸ்திரமென்பது நாம் விரும்புகிறபடி சத்ருநிக்ரஹமான பலனைக்கொடுக்கிறது. பீமசேனர் சுத்தமான பகவத் ப்ரீதிகரமான தர்மத்தில் ஈடுபட்டிருந்ததால் அல்ப பலனைக்கொடுக்கக்கூடிய காரியத்தை அவர் செய்தவரல்ல. தேவர்



கள் மனுஷ்யர்களை யாசிப்பதில்லை. ஆகையால் த்ரோணரின் அருளால் வந்த அஸ்திரங்களின் ஞான விஷயத்தில் அர்ஜுனன் அதிகமானவனென்று சொல்லப்பட்டது. பீமசேனர் எந்த காலத்திலேயும் ரூபம் ரஸம் முதலான விஷயங்கள் வேண்டுமென்ற விருப்பத்துடன் பகவானை ப்ரார்த்திக்கவில்லை. ஏகசக்ரா பட்டணத்திலேயும் பிச்சையை யாசித்தபொழுதும் அரசன் வைசியர்களிடமிருந்து கிஸ்தியை வசூல்செய்வதுபோல் ஹுங்காரம் செய்துகொண்டு பிக்ஷா அன்னத்தை பீமசேனர் பெற்றாரேயொழிய ப்ரார்த்தித்து வாங்கவில்லை. பகவானைத்தவிர்த்துள்ள இதர தேவர்களை பீமசேனர் பூஜிக்கவில்லை. பீமசேனர் பகவானுக்கு விரோதத்தை எக்காலத்திலேயும் எக்காரணத்தைக்கொண்டும் செய்யவில்லை. யுத்தம் செய்யும்பொழுது கவசம் ஆயுதங்கள் முதலான ஸாதன ஸாமக்ரிகளில்லாதவர்களிடம் அவர் யுத்த ஸாதனங்களுள்ளவர்களாய் எதிர்த்துச் செல்லவில்லை. அவர் யுத்தத்திலிருந்து யுத்தம் விட்டு எப்போதும் போய்விடவில்லை. எந்த யுத்தத்திலேயும் அவர் வஞ்சனையை செய்யவில்லை. விஷ்ணு த்வேஷிகளான துர்யோதனாதிகளின் விஷயத்தில் அவர்கள் இறந்தபின் அவர்களுக்குச் செய்யவேண்டிய ச்ராத்தாதிகளைச் செய்ய அனுமதிக்கொடுக்கவில்லை. சுயம் அவர் அவைஷ்ணவர்களுக்கு சிரார்த்தமும் செய்யவில்லை. அவைஷ்ணவர்களுக்கு இஷ்டமானதை அவர் எப்பொழுதும் செய்யவில்லை. அவர் அவைஷ்ணவர்களுடன் சிநேகமும் வைத்துக்கொள்ளவில்லை. விஷ்ணுபக்தனுடன் அவர் த்வேஷம் செய்யவில்லை. தூரத்திலிருந்து விஷ்ணுவின் தூஷணையை ஒருவன் செய்தானாகில் அவனுடைய நாவை பீமசேனர் அறுத்தெரிவார். அவர் விஷ்ணுவை த்வேஷித்தவர்களை கொன்றார். அவைஷ்ணவர்களான விவாகாதிகளில்லாத ராஜகுமாரர்களை இதராளைக்கொண்டு ஸம்ஹாரம் செய்தார். தர்மம் இன்னதென்பதில் பீமசேனருக்கு எப்பொழுதும் சந்தேகமில்லை: அவர் ஆபத்காலத்திலேயும் வித்தையைக் கொண்டு எப்பொழுதும் ஜீவனம் செய்யவில்லை. ஆதலால்தான் யக்ஷரூபியான யமனும் மலைப்பாம்பாக இருந்த நஹுஷனும் இவரை ப்ரச்னங்களை செய்துகொல்லப்பார்த்தும் அவைகளுக்கு

பதில் சொல்லி தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனிக்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணருடைய ஆக்ஞையாகிற ப்ரபலமான காரணம் ஏற்பட்டதால்தான் அசுவத்தாமாசாரியார் போட்ட அஸ்திரங்களுக்கு பதிலான அஸ்திரங்களை போட்டு அவைகளை பரிகரித்துக்கொண்டார். ஸ்ரீகிருஷ்ணருடைய ஆக்ஞையால்தான் மறைந்திருந்த அலம்புஸாஸுரனை பராஜயப்படுத்தினார். ஆனால் மற்ற யுத்தங்களில் இவ்வாறு அஸ்திரங்களை பீமசேனர் எப்பொழுதும் ப்ரயோகிக்கவில்லை. அஸ்திரயுத்தத்தில் அர்ஜுனனைத் தவிர அசுவத்தாமாசாரியாருக்கு ஸமமானவர் யாருமில்லை என்பது உலகப்பிரஸித்தம். ஆகையால் 'அர்ஜுனனைவிட பீமசேனர் எல்லா அஸ்திரங்களையுமறிந்தவரென்று ஜனங்களுக்கு காட்டவே அசுவத்தாமாசாரியாரிடமும் அலம்புஸாஸுரனிடமும் அஸ்திரயுத்தம் செய் என்று ஸ்ரீகிருஷ்ணர் பீமசேனருக்கு ஆக்ஞையிட்டார். அப்பொழுது அஸ்திராபிமானி தேவர்கள் ப்ரத்யக்ஷமாய் வந்தனர். அவர்களுக்கும் இவருடைய மூத்தவர்களான தர்மபுத்திரர் முதலான பந்துக்களுக்கும் நமஸ்காரம் செய் என்று ஸ்ரீகிருஷ்ணர் தர்மமரியாதையை காப்பாற்றுவதற்காக பீமசேனருக்கு ஆக்ஞையிட்டார். ஆகவேதான் பீமசேனர் ப்ரத்யக்ஷர்களாய் வந்த தேவர்களிலும் குந்தி யுதிஷ்டிரர் முதலான மூத்த பந்துக்களிலும் அந்தர்யாமியான ஸ்ரீவிஷ்ணுவைத்தான் நமஸ்காரம் செய்தாரேயன்றி அங்குள்ள ஜீவனை நமஸ்கரிக்கவில்லை. அஸ்திராபிமானி தேவதைகளை வேலையாட்களைப்போல் அவர் அதிகாரத்துடன் ப்ரேரிபித்தாரேயன்றி அவர்களை இன்ன காரியம் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கவில்லை. பீமசேனருக்கு அடுத்தாப்போல் த்ரௌபதி ஒருவள்தான் பாகவத தர்மத்தில் எப்பொழுதுமிருந்தாள். அவள் தன் மாமனாரான திருதராஷ்டிர ராஜனிடமிருந்தும் ஸ்வப்ரயோஜனார்த்தமாய் எந்த வரனையும் வேண்டவில்லை. மகா ஆபத்காலத்திலேயும் துரியோதனாதிகளுக்கு துரௌபதி சாபம் கொடுக்கவில்லை. துரௌபதி பீமசேனருக்கு அநுகூலமான தர்மத்தைச் செய்பவளாதலால் வார்த்தையாலும் மனதாலும்கூட ஸ்ரீகிருஷ்ணருக்கு விரோதம் செய்யவில்லை. வாயுபகவான் பாரதிதேவி ஆகிய இந்த பீமசேனர் துரௌபதி



இவர்களைத்தவிர்த்துள்ள பலராமர் முதலியோர் சிற்சில காரியங்களில் பாகவத தர்மத்தை விட்டவர்களாவார்கள். மற்ற தேவர்கள் பாகவத தர்மத்தை எப்படி பங்கம் செய்தாரென்றால் அதன் விவரமாவது:— ச்யமந்தக மாணிக்ய விஷயத்தில் பலராமர் ஸ்ரீகிருஷ்ணரிடம் விரோதபுத்தியைக் கொண்டார். பிராம்மணனின் குழந்தையை ஸம்ரக்ஷித்த காலத்தில் அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணரை அவமானமாகப் பேசினான். ப்ரத்யும்னன், உத்தவன், ஸாம்பன் அநிருத்தன் முதலிய எல்லா யாதவர்களும், ஸுபத்திரையை அர்ஜுனனுக்குக் கொடுப்பதில் ஸ்ரீகிருஷ்ணருக்கு விசேஷமாய் இஷ்டமிருப்பதை அறிந்தும் அதில் ஸம்பூர்ணமாய் தடைகளைச் செய்தனர். ஸாத்யகி ஓர் ஸமயம் அர்ஜுனனை ஸ்ரீகிருஷ்ணருக்கு ஸமமானவனென்று எண்ணினான். யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணரை ஓர் மனுஷ்யனென்றறிந்த ஜராஸந்தனைக் கொல்வதற்காக ஸ்ரீகிருஷ்ணரை அனுப்ப பயந்தான். விதுரனும் துரியோதனாதிகள் ஸ்ரீகிருஷ்ணரை கட்டிவிடுவார்களென்று பயந்து துரியோதனாதிகளின் சபையின் நடுவில் ஸ்ரீகிருஷ்ணர் வருவதை ஒப்புக்கொள்ளவில்லை. நகுலன் ராஜஸூயயாககாலத்தில் கப்பத்தைக்கட்டும்படி ஸ்ரீகிருஷ்ணருக்கு தூதனை அனுப்பினான். ஸ்ரீகிருஷ்ணர் குலநாசம் செய்வதாய் எண்ணி ஸகதேவன் ஸ்ரீகிருஷ்ணரின் அபிப்பிராயத்தை அவமதித்தான். தேவகி வஸுதேவன் முதலானவர்கள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ஓர் மனுஷ்யனாக எண்ணினர். பீஷ்மாசாரியார் பரசுராமரை அவமதித்து அவருடன் யுத்தம் செய்தார். த்ரோணாசாரியார் கர்ணன் அசுவத்தாமாசாரியார் கிருபாசாரியார் ஸ்ரீகிருஷ்ணரைக்கொல்ல அபிப்பிராயம் கொண்டனர். ருத்திராதி தேவர்கள் அவர்களின் மூலரூபத்தாலும்கூட ஸ்ரீகிருஷ்ணருக்கு சில ஸமயங்களில் விரோதம் செய்தனர். ரிஷிகள், மனுஷ்யோத்தமர்கள் கந்தர்வர்கள் அவர்களின் ஜன்மாந்தரத்திலிருந்துவரும் அநாதியான அக்ஞானத்தால் பகவானை எப்பொழுதும் அவமானம் செய்வதால் தேவர்களைவிட அதிகமாய் பாகவத தர்மம் பங்கமடைந்தவர்களென்று சொல்லவும்வேண்டுமோ? ஆதலால் வாயுபகவான் ஒருவர்தான் பாகவத தர்மத்தில் இருப்பவர். லக்ஷ்மீதேவி, சரஸ்வதிதேவி இவர்கள்

பாகவத தர்மத்தில் இருப்பவர்கள். ஆக வாயு பாரதி லக்ஷ்மீ இவர்கள் பகவத் தர்மத்தினின்றும் விலகாதவர்களாதலால் இவர்கள் பரசுக்லத்ரயர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இப்பொழுது நாம் சொன்ன ப்ரமேயங்கள் அமிதஸ்வரூபராயும் ஸ்வரூபக்ஞானமுள்ளவருமான ஸ்ரீவேதவியாஸராலேயே புராணங்களிலும் பாரதத்திலேயும் அந்தந்த ப்ரகரணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

## ராஜகுமாரர்கள் அஸ்திர வித்தையைக் காட்டியது.

ராஜகுமாரர்கள் எல்லா அஸ்திரங்களை தெரிந்துகொண்ட பின்பு பாரத்வாஜரின் பிள்ளையான த்ரோணாசாரியார் ரங்கஸ்தலத்தின் நடுவில் அந்த ராஜகுமாரர்களை ஜனங்களுக்குக் காட்டினார். த்ரோணாசாரியார் பரசுராமரை சிகப்பு சந்தனம் நல்ல புஷ்பம் வஸ்திரங்கள் ஆயுதம் வெல்லம்போட்ட அன்னம் இவைகளால் தன் குருவான பரசுராமரை விசேஷமாய் பூஜித்து ராஜகுமாரர்களை தனுர்வித்தையைக்காட்ட ஆக்ஞையிட்டார். அவர்கள் ராஜஸமூகங்களுடன் கூடிய பீஷ்மர், த்ரோணர், விதுரன், காந்தாரி, திருதராஷ்டிரன், குந்தி இவர்களை நமஸ்கரித்து அவர்கள் கற்ற வித்தையின் பரிச்ரமத்தைக்காட்டினார்கள். எல்லா ராஜர்களும் அஸ்திரங்களைக் காட்டியபிறகு த்ரோணாசாரியாரிடமிருந்து ஸம்பாதித்த மகாஸ்திரங்களைக் கற்றறிந்த அசுவத்தாமாசாரியார் எல்லா குமாரர்களைவிட அதிகமாய் அபரிமிதமான அஸ்திரங்களைக்காட்டினார். அர்ஜுனர் அசுவத்தாமாசாரியாரைவிட அதிகமாய் திவ்யாஸ்திரங்களைக்காட்டினான். கொசுவின் ஓர் காலை பாணத்தாலடித்துக்காட்டினார். பக்ஷியின் கண் இமை மயிரை பாணத்தால் சேதித்தான். இது முதலான வெகு விசித்ர காரியங்களை அர்ஜுனன் செய்து காட்டினான். அந்த சந்தர்பத்திலேயே கர்ணன் அங்கு வந்து பரசுராமரிடமிருந்து அடையப்பெற்ற அஸ்த்ரஸம்பத்தை ராஜஸபையில் காட்டி அர்ஜுனனைவிட மேலானவனானான். குந்தி கர்ணனை தன் மகனென்றறிந்துகொண்டாள். ஆனால் வெட்கத்தால் அதை வெளியில் சொல்லவில்லை.



# சங்கரலீலா விலாஸம்.

முன்தொடர்ச்சி.

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்பாராவ், M.A., அவர்கள் எழுதுவதாவது:—

அழுகும் காலுள்ளவன், வீங்கிய வயிறுள்ளவன், பிளேக், காலரா, இன்ப்லூயன்ஸா, உப்பஸம், பரிணாம சூலை முதலான மாயா பரிணாமங்கள் எல்லாமே அக்கினிக்கு உஷ்ணத்தன்மை இருப்பதுபோல் ப்ரம்மத்திற்கு ஸ்வாபாவிகமான தர்மங்கள்.

ஐய்யா! இது ஹாதி ஆசாரியாரை அடக்க சாஸ்திரிகள் சொல்லும் தங்கு தடையில்லாத வாக்கியார்த்தம். [குறிப்பு:— வாதத்தில் எழுந்து அடிப்பதுதான் மாத்வ வாக்யார்த்தமென்று சாஸ்திரிகள் தமது நூலில் எழுதியிருக்கிறார். முன்பு திரியம்பக சாஸ்திரிகளை ஓர் மாத்வர் ஸபையில் அறைந்திருப்பதாக காட்டியிருக்கிறார். நான் ரிசர்ச் செய்து தேடிப்பார்த்தேன். எனக்கு இவ்வாறு விஷயங்கள் தென்பட்டிருக்கின்றன. ஸபையில் த்ரியம்பக சாஸ்திரிகளின் பூர்வபக்ஷத்தை நிராகரண பூர்வமாய் வ்யாஸ ஸ்மிருதி என்ற ஓர் வாக்யத்தை மாத்வபண்டிதர் உதாஹரணம் செய்தார். சாம்ப சாஸ்திரிகள் சொன்னபடி ஸ்மார்த்த வாக்யார்த்தத்தில் பிரவேசமடைந்திருக்கும் த்ரியம்பக சாஸ்திரி வ்யாஸஸ்மிருதி அபஸ்மிருதி என்று பரிகாசம் செய்து இருந்தார். மாத்வ வாக்யார்த்தத்தில் மகா நிபுணத்தை அடைந்த மாத்வ பண்டிதர் பளீர் என்று சாஸ்திரிகளின் கன்னத்தில் அறைந்தார். உடனே அந்தகன்னம் வீங்கிப்போயிற்று. இதைக்கண்டு பயந்து அந்த மாத்வ பண்டிதர் ஓடிப்போனார். அப்பொழுது மைசூர் அரசனாயிருந்த கிருஷ்ணராஜ உடையார் மகாராஜா அவரை வரவழைத்து நடந்த விருத்தாந்தத்தைக் கேட்டு நீர் ஒரே கன்னத்தில் தான் அறைந்ததால் உமக்கு ஒத்தை சால்வையைத்தான் கொடுக்கிறேன் என்று அவருக்கு ஒத்தை சால்வையை இனாம் கொடுத்தாராம். பலே என்று பாஹுவைத் தட்டிக்கொண்டு மாத்வபண்டிதர் வீடுபோய் சேர்ந்தார். பிறகு திரியம்பக சாஸ்திரிகள் காசி திம்மண்ணாசாரியாரால் வாதத்தில் பராஜயமடைந்தார். திம்மண்ணாசாரியார் வாக்யார்த்தத்தில் சொன்ன யுக்திகளை குமதகண்டனமென்கிற அவருடைய நூலில் எழுதியிருக்கிறார். இந்த நூல் காசி ப்ராணேசாசாரியாரால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.] இப்பேர்ப்பட்ட

அழகான வாக்யார்த்தத்தை வேறு யார்தான் சொல்ல முடியும். இப்பேர்பட்ட ஞானம் குக்ராமத்திலிருக்கும் ஹாதீ ஆசாரியாருக்கு எப்படி வரும். சாஸ்திரிகளுக்கு இப்பேர்பட்ட ஞான ஸாமார்த்தியம் மைசூர் மகாராஜாவின் அரண்மனையில் தான் கற்றுக்கொடுக்கப்பட்டது போலும். ஹாதீ ஆசாரியாரே! உஷார். மைசூர் ராஜஸ்தான மல்லருடன் சண்டைபோட கிளம்பாதேயும். அவர் அரண்மனை வித்வான் பதவியிலிருந்து அவர் கொடுத்திருந்த திகந்த விஸ்திருதமான ப்ரம்மத்தின் குரூப ஸமுதாயங்களைக் காணுங்கள். இவை எல்லாம் ப்ரம்மத்தின் ஸ்வாபாவிகமான தர்மங்கள். இவ்வளவு குரூபங்களை ப்ரம்மனுக்கு உமக்குத் கொடுக்கத் தெரியாததால்தான் சாஸ்திரிகள் ச... டிகை என்ற நூலை எழுதினார்.

சாஸ்திரிகள் நிரூபணம் செய்திருக்கும் ப்ரம்மத்தின் ஸ்வாபாவிகமான தர்மங்களை நாம் பார்த்தோம். ஆனால் அப்பேர்பட்ட ஸ்வாபாவிகமான தர்மமுள்ள துர்தெய்வத்தை மனப்பூர்வமாய் நாம் திரஸ்கரிப்போம். அது வேததாத்பரியத்திற்கு ஸம்மதமான பரப்ரம்மமல்ல,

மாயையோ அல்லது அவித்யையோ எந்த ரீதிப்படிக்கும் அத்வைத மதத்தில் நிரூபணம் செய்யப்படமுடியாதென்று அநேக நூலாசிரியர்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர் இங்குசிலவாக்யங்களை மட்டில் உதாஹரிக்கின்றோம்:—

(1) But whence comes this Avidya the principal cause of ignorence Sin and misery? No satisfactory answer has been given to the question.

The Vedanta (P. 25) by V. S. Ghate M.A, (Bomb) B.A., (Cantab) Doctor of the University of Pains.

இதன் பொருள்:— அக்ஞானம் பாபம் துக்கம் முதலியவை எல்லாவற்றிற்கும் மூலகாரணமான இந்த அவித்தை எங்கிருந்துவந்தது? (என்றால் பிரம்மத்திற்கு எப்படி தானாகவே ஸம்பந்தமடைந்திருக்கிறது?) இந்த கேள்விக்கு அத்வைததத்வத்தில் ஸரியான பதிலைக்கொடுக்கவில்லை. டாக்டர் V. S. காடி.

(2) "If (Maya) is something which cannot obviously be connected with the one great being"

W. S. Urquahart M.A., D. Lit. Vice Chancellor of the Calcutta University.

பிரம்மமொன்றே ஸத்யமென்று ஒப்புக்கொண்டபின் இந்த (அத்வைத) மதத்தில் பிரம்மனுக்கு மாயாஸம்பத்தை எந்த ரீதியிலும் யோசனம் செய்ய முடிவதில்லை. W. S. ஊர்காட்.



# ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
# மணிமஞ்ஜரி.

(ஆறுவது ஸர்க்கம்.)

முன் தொடர்ச்சி.

மேலும் சங்கராசாரியாரால் சுயம் இயற்றப்பட்டதாய் சொல்லப்படும் கேரளோற்பத்தி என்னும் கிரந்தத்தில் சங்கரரின் தாயாரை பஹிஷ்கரித்தற்குகாரணம் வியபிசாரமூலமென்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் எச். எச். வில்ஸன் துரையவர்கள் எழுதிய Sketch of his religious sects of Hindus என்ற கிரந்தத்திலும் சங்கராசாரியாரின் சரித்திரத்தைச் சொல்லும்பொழுது சங்கராசாரியாரின் ஜனனம் வ்யபிசாரமூலமென்றும் அதற்காக அவருடைய தாயான மகாதேவி ப்ராம்மணர்களால் பஹிஷ்கரிக்கப்பட்டிருந்தாளென்றும் அவளுடைய உத்தரகிரியை விஷயத்தில் சொந்த ஜனங்களெல்லோரும் உதவிபுரியாமல் விரோதம் செய்ததால் அவர்களுக்கு சங்கரரின் சாபமேற்பட்டதென்றும் சங்கரரால் சுயம் இயற்றப்பட்டதாய் சொல்லப்படும். கேரளோற்பத்தியிலிருந்து தெரியவருகிறதென்றும் தான் விசாரித்தவரை சங்கரரின் உண்மையான சரித்திரம் விளங்குவதில்லை என்றும் கூறியிருக்கிறார். மேலும் வீரேசலிங்கம் பந்துலுவும் அவர் எழுதிய சங்கரசரித்திரத்தில் கேரளோற்பத்தியிலிருந்து மேற்கண்டவாறு தெரியவருவதாய் எழுதியிருக்கிறார். இவ்வாறு இது சம்பந்தமான பலநூல்களை பரிசீலனை செய்வதிலிருந்து பதின்மூன்றுவது நூற்றாண்டிலிருந்த ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் சொன்ன சங்கராசாரியாரின் சரித்திரம் அக்காலத்தில் பிரஸித்தமாயிருந்ததைத் தான் அவர் தமது நூல்களில் அறிவித்திருக்கிறாரேயன்றி மதத்வேஷத்தால் சங்கராசாரியாரைவேண்டுமென்று பொய்யாக குறை கூறினதாக எண்ண இடமில்லையென்பது நிச்சயிக்கவேண்டிய

தாகும்.] 8. இவ்வாறு அந்த விதவை தனக்கு அருமையாய் பிறந்த அந்த மகனைப் பார்த்து பார்த்து பரமாநந்தமடைந்தாள். மகன் அரோக திடகாத்ரனாய் புஷ்டனாய் இருக்கவேண்டுமென்று அவனுக்கு எப்படி போஷணை ஏற்படுமோ அப்படி அவனுடைய வயிற்றுக்குத்தகுந்தபடி ஆகாரத்தைக்கொடுத்து வந்தாள். சாஸ்திரங்களில் நிஷேதிக்கப்பட்டிருப்பவைகளையும் கவனியாமல், கொதிகஞ்சி, அத்திக்காய், மொச்சக்காய், முருங்கைக்காய், சொரைக்காய்,' கத்தரிக்காய் முதலியவைகளை தாராளமாய் சமைத்து போடுவாள். 9. ஒரு ஸமயம் அந்த விதவை தனது மகனை சங்கரரைக்கூப்பிட்டு கொல்லையிலிருந்து ஐந்தாறு கத்தரிக்காய்களை பரித்து சீக்கிரம் வா என்றாள், தாய் இவ்வாறு கொண்டுவரும்படி பிரேரிபிக்கவும் சங்கரர் கத்தரிச்செடிகள் ஏராளமாயிருந்த தன் தோட்டத்திற்குச் சென்றார். 10. அங்கிருந்த ஏராளமான கத்தரிச் செடிகளிலிருந்து ஒன்று ஒன்று ஒன்றென்று வாயால் சொல்லிக்கொண்டு ஒரு கூடை நிறைய கத்தரிக்காய்களைப் பறித்தார். இவருக்கு ஒன்றாகவே புலப்பட்டதேயன்றி இரண்டாவது இருப்பதாகவே அவர் கண்டுகொள்ளவில்லை. 11. அவ்வளவு காய்களையும் எடுத்துக்கொண்டு தாயிடம் வந்து தாயின் எதிரில் வைத்து அம்மா கத்தரிக்காய்களில் இரண்டு இருப்பதாகவே தெரியவில்லை இப்படியிருக்க நீ சொன்னபடி நான் ஐந்தாறு காய்களை எப்படி கொண்டுவருவேன் என்று சொன்னார். 12. கூடை நிறைய காய்களை வைத்துவிட்டு எல்லாம் ஒன்றுதான் என்று சொல்கிறானே! இது என்ன ஆச்சரியம்; என்று தாயார் ஆச்சரியப்பட்டு தெருவில் போய்க்கொண்டிருந்தவர்களை கூப்பிட்டு இந்த அதிசயத்தைச்சொல்ல அவர்கள் இதைப்பார்த்து சிறித்துவிட்டு பையன் உண்மையைத்தான் பேசுகிறான். கூடையில் ஒரு காய் தானே இருக்கிறது. ஒன்றில் எவன்தான் இரண்டைப் பார்க்க முடியும்? என்று பரிகாசமாய்ப் பேசிச் சென்றனர். 13. சங்கரருக்கு ஸரியான வயது வந்தவுடன் யாரோ ஓர் ப்ராம்மணன் சங்



கரர் உபநயனமில்லாமலிருப்பதைப்பார்த்துவிட்டு ப்ராம்மணப் பையன் ஏன் உபநயனமில்லாமலிருக்கவேண்டுமென்று கருணையால் சங்கரருக்கு உபநயனம் செய்துவைத்தார். [குறிப்பு:— தந்தை போனபின்புதான் சங்கரருக்கு உபநயனமானதாக மாதவீயம் சங்கரவிஜயமும் ஒப்புக்கொள்ளுகிறது.] சங்கரர் வாயாடியாயும் சாமர்த்யசாலியாயுமிருந்ததைக்கண்டு அந்த ப்ராம்மணன் தன்னுடன் சங்கரரை ஸௌராஷ்டிர தேசத்திற்கு அழைத்துச்சென்றார். பிரம்மசாரியான சங்கரர் அந்நகரில் பிக்ஷையெடுத்துவந்தார். நெய் பால் இவைகளுடன் பிக்ஷான்னம் ஸுலபமாய் அவருக்கு அங்கு கிடைத்துவந்தது. 14. சங்கரர் அங்கு வசித்துக்கொண்டு வேதாத்யயனம் செய்தார். பூர்வஜன்மத்தில் அவர் பரமசிவனைக் குறித்து வெகு நாள் தவம் செய்து அவருடைய வரனைப்பெற்றிருந்ததால் அந்த ப்ரஸாதத்தின் மகிமையால் வெகு ஸ்வல்பகாலத்திலேயே வேதாத்யயனம் செய்து முடித்தார். 15. பிறகு சங்கரர் அங்கிருந்து கிளம்பி கிழக்கேயிருந்த ஊர்களுக்குச் செல்ல புறப்பட்டார். வழியில் ஓர் ஆறு குறுக்கிட அதை நீந்தியே கடக்க நேர்ந்தது. அதில் அவர் நீந்தி வரும்போழுது அவருடைய யக்ஞோப வீதம் ஜலத்தில் போய்விட்டது. அதில்லாமலே சங்கரர் கரையேறினார். 16. சங்கரர் தன் யக்ஞோபவீதம் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டதைப்பார்த்து இவ்வாறு தனக்குத்தானே பேசிக்கொண்டார். யக்ஞோபவீதமே! என்னையா நீ விட்டுச்சென்றாய்? அப்படியாயின் நான் உன்னை முன்பே விட்டுவிட்டேனென்கிறேன். நீ ப்ரம்மசாரியாயிற்றே! நானில்லாமல் நீ வைதிககர்மாங்களை எப்படி செய்ய அருகமாவாய் என்று யக்ஞோபவீதமே! நீ கேட்பாயோ? வைதிககர்மங்களில்லாதிருக்கும் எனக்கு வைதிககர்மங்களுக்காக ஏற்பட்டிருக்கும் உன்னால் என்ன பிரயோஜனம். நீ எனக்கு இனி வேண்டாமென்று சொல்லி யக்ஞோபவிதமில்லாமலே வேகமாய் சென்றார். [குறிப்பு:— நவர்ணா:; நவர்ணாசிரமாசாரதர்யா:; முமுக்ஷா: ஸர்வகர்ம ஸன்யாஸ விதானத்; என்று சங்கராசாரியர் வசனங்கள் இரை

ஆசிரமங்கள் பொய் அவைகளின் தர்மங்கள் பொய் (பொய் என்றால் இதற்கு முன் செய்தவைகளும் பொய் தற்போது செய்கிறவைகளும் பொய் இனி செய்யப் போகிறவைகளும் பொய்) என்றும் மோக்ஷத்தை விரும்புகிறவன் கர்மத்தை செய்வதை விடவேண்டுமென்றும் உபதேசித்திருப்பதால் கர்மபரித்யாகம் சங்கரரின் கொள்கையேயாகும்] 17. இவ்வாறு யக்ஞோபவீதமில்லாத குச்சிதமான பிரம்மசாரியாகிய அந்த சங்கரர் சாதுர்மாஸ்ய விரதம் செய்திருந்த துர்வாஸரின் சிஷ்யரான பரதீர்த்தரென்ற ஸன்யாஸியாரிருந்த இடம் வந்து சேர்ந்தார். அவரை தரிசித்து ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்து தன்னை சிஷ்யனாய் ஏற்றுக்கொள்ள ப்ரார்த்தித்து கேட்டுக்கொண்டார். 18. மகா ஞானியான பரதீர்த்தர் சங்கரர் ப்ரம்மசாரியென்று சொல்லிக்கொண்டு யக்ஞோபவீதமில்லாமலிருப்பதையும் மகா அஸுரனுக்குரிய சரீர லக்ஷணங்களுடனிருப்பதையும் கண்டுகொண்டு அருவெறுப்புகொண்டவராய் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்து அயோக்யனைப்பார்த்த பாபம் நீங்க உடனே ஆசமனம் செய்துவிட்டு மீண்டும் சங்கரரின் கண்ணிற்படாதிருக்க அவருடைய மடாலயத்தின் உட்புறத்திற்குச் சென்றார். 19. சங்கரர் தான் அஸுரனென்பதை பரதீர்த்தர் கண்டுகொண்டாரென்று அறிந்து அவரை விட்டுக்கிளம்பி தனக்கு ஸன்யாஸம் தர ஓர் குருவைத்தேடிக்கொண்டு ஆங்காங்கு தேச சஞ்சாரம் செய்து கோதாவரியைத் தாண்டி வடதேசம் சென்றார். பிறகு பதரிகாசிரமம் போய் சேர்ந்தார். அங்கு இந்த பரதீர்த்தரின் சிஷ்யரான ஸத்யப்ரக்ஞதீர்த்தர் வசித்திருந்தார். சங்கரர் அவரிடம் சென்று அவரை நமஸ்கரித்து இவ்வாறு பேசினார். 20. ஸ்வாமி! நான் தங்கள் குருவான பரதீர்த்தரின் சிஷ்யன். இதுகாறும் அவரிடம் வசித்திருந்தேன். எனக்கு ஸன்யாஸம் தரவேண்டுமென்று அவரை வேண்டினேன். அவர் தாங்கள் இங்கு இருப்பதாயும் தங்களிடம் போகும்படிக்கும் என்னை ஆக்ஞாபித்திருக்கிறார். அதன்படி நான் தங்களிடம் வந்திருக்கிறேன். தயவுசெய்து எனக்கு ஸன்யாஸம் தரவேண்டும் என்று சொன்னார். சங்கரர் எவ்வளவு சொல்லியும் ஸத்யப்ரக்ஞதீர்த்தருக்கு அவருடைய வார்த்தையில் சிறிதும் நம்பிக்கை ஏற்படவில்லை.

(தொடரும்.)



# சண்டாள ஸம்பர்க்கம்.

முன் தொடர்ச்சி.

அக்ஞானத்தால் சண்டாளனுடைய கிணற்று ஜலத்தை ஒருவன் பானம் செய்தால் ஓர் இரவு உபவாஸமிருந்து மறுநாள் பஞ்சகவ்யம் ப்ராசனம் செய்தால் சுத்தி. சண்டாளனுடைய பாத்ரத்திலுள்ள ஜலத்தை தெரியாத்தனத்தால் ஓர் ப்ராம்மணன் குடித்துவிட்டால் மூன்று கிருச்ரங்களைச் செய்தால் அந்த பாபம் தொலையும். சண்டாளன் தொட்ட ஜலத்தைப்பானம் செய்தால் நான்கு கிரச்ரம் செய்து சுத்தனாகி புனருபயனாதி ஸம்ஸ்காரங்களைச் செய்துகொள்ளவேண்டும். சண்டாளர்கள் வெட்டிய கிணர், கேணி, குளம் இவைகளில் ஸ்நானம் பானம் செய்தால் ப்ராஜாபத்ய கிருச்ரம் செய்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு எமது தர்மசாஸ்திரங்களில் சண்டாளனை ஸ்பரிசிப்பதும், அணுகுவதும், பார்ப்பதும், அவனுடைய வார்த்தைகளைக் கேட்பதும், அவனுடைய நிழல் படுவதும், அவன் தொட்டதைத்தொடுவதும், அதை உட்கொள்வதும் ஆகிய அவனுடைய எவ்வித ஸம்பர்க்கமுமே நான்கு வர்ணத்தார்களுக்கும் விசேஷமாய் பிராம்மணர்களுக்கும் தகாதென்று பலமாய் தடுக்கப்பட்டிருப்பதுடன் அது அனுஷ்டிக்கப்பட்டால் அதற்கு கடுமையான ப்ராயச்சித்தங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இது சிற்சில விதிகட்போல் சிலஸ்மிருதிகாரர்களுடையமட்டில் அபிப்பிராயமென்றாவது கலியுகத்திற்கேற்றதல்ல என்றாவது சொல்வதற்கில்லை. ஏனெனில் ஸ்மிருதிக்காரர்களான மகரிஷிகள் எல்லோரும் எல்லாயுகங்களிலும் அவர்களால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு அழுத்தமாக வேகண்டித்திருக்கின்றனர். லோக க்ஷேமார்த்தமாய் ப்ரவிருத்தித்த எமது அந்த மகரிஷிகள் சண்டாளர்களிடம் மட்டில் த்வேஷாதிகளைக்கொண்டு தீண்டாமை என்பதை கல்பித்திருப்பதாய் சொல்வது தகாது. வர்ணங்களில் உத்தமர்களெனச் சொல்லப்படும் பிராம்மணர்களுக்குமே பல ஸந்தர்பங்களில் தீண்டாமை ஏற்படுவதாய் அவர்கள் அறிவித்திருக்கின்றனர். சண்டாளர்களென்று அவர்களை ஒதுக்கிவிடாமல் அவர்கள் செய்யவேண்டிய தர்மங்களையும் அவர்களின் தனியான உரிமைகளையும் அவர்களுக்கு வர்ணத்தார்கள் செய்யவேண்டிய கடமைகளையும் காட்டியிருக்கின்றனர். ஆச்வப்ய: ஆச்வபாகேப்ய: தத்யாதன்னம் ஸமஸ்தச:| புரஸ்தாத் பாதஸ்சைவ ஸப்தாராத்ரம் நிரந்தரமென்றார் ஸ்ரீபகவத்பாதாள். அன்னம், உதகம் இவைகளை வர்ணத்தார்களிடமிருந்து பெற அவர்

களுக்கு எமது மகரிஷிகள் அதிகாரமும் கொடுத்திருக்கின்றனர். அவர்கள் பூர்வஜன்மாவில் செய்த பாபத்தின் பலனாய் அந்த பாபத்தை அனுபவிக்க இந்த சண்டாள ஜன்மம் அவர்கள் பெற்றிருக்கின்றனரென்று அவர்களிடம் கருணைகொள்ளவேண்டுமே ஒழிய அவர்களை நிந்திப்பதும், கோபிப்பதும் புத்திமான்களுக்கு தகாதென்பதே எமது மகரிஷிகளின் அபிப்பிராயம். அவ்வாறே ஸ்ரீமகாபாரதம் அனுசாசன பர்வத்தில் பரமசிவன் பார்வதியிடம் "தானப்ய வஸ்தா கிருபணான் சண்டாளான பிபுத்திமான் | நச நிந்தேன்னுபிகுப்யேத் புஞ்ஜதேஸ்வகிருதம் பலம்" என்று கூறியிருக்கிறார். பூர்வஜன்மாவில் செய்த புண்யபாப பலன்களை அனுபவிக்க அவரவர்கள் பலவகை ஜன்மங்களை அடைவதுபோல் இவர்கள் பூர்வஜன்மாவில் மகா கர்விஷ்டர்களாய் மமதைப்பிடித்தவர்களாய் தம்தம் தர்மத்தை விட்டுவிட்டு பெரியோர்களுக்கு வணங்காமலும் இதரர்களை தம்தம் திரவியபலத்தைக்கொண்டு பலவகையாய் மடக்கி தங்களுக்கு வணங்கும்படியாய்ச்செய்த பாபங்களின் பலனாக இவர்கள் அடுத்த பிறப்பில் சண்டாளர்களாய் பிறந்து எல்லோருக்கும் மேலாக இருந்த இவர்கள் எல்லோருக்கும் அடிமைக்காரர்களாகி ஒருவருக்கும் கையெடுத்து கும்பிடாதவர்கள் எல்லோருக்கும் கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டு எல்லோரையும் கும்பிடச்செய்த இவர்கள் ஒருவராலும் கும்பிடக்கூடாதவர்களாய் ஆகி எல்லோர் அமேத்யம் முதலானவைகளை எடுத்தல் முதலான ஜுகுப்ஸிதமான விருத்திகளைச் செய்துகொண்டு குரூபமும் கடும் சித்தமுமுள்ளவர்களாய் தீண்டாதாரர்களாய் பாபத்தில் புத்தியுள்ளவர்களாய் சண்டாளர்களெனப் பிறந்திருக்கிறார்கள். இந்த சண்டாள ஜன்மம் தொலைய அவர்களுக்கு விதித்திருக்கும் தர்மங்களை அவர்கள் செய்யவேண்டுமேயல்லாது இதரர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தர்மங்களைச் அவர்கள் செய்யலாகாது. 'ஸ்வேஸ்வேகர்மண்ய பிரத: ஸம்ஸித்திம் லபதே நர: என்று அவரவர்களின் தர்மங்களைச் செய்ய பகவான் வற்புறுத்தியிருப்பதுடன் "ஸ்வதர்மே நிதனம்ச்ரேய: பரதர்மோ பயாவஹ" என்று இதரருடைய தர்மத்தைச் செய்யலாகாதெனவும் எச்சரித்திருக்கிறார். "சண்டாளா அபி தாம் ஜாதிம் சோசந்த:சுத்தி மாப்னுயு: சண்டாளர்கள் தங்கள் நிலைமையை உணர்ந்து பச்சாதாபமடைந்து அவர்களின் தர்மங்களை சரிவர நடத்திவந்தால் அவர்கள் உத்தாரமடைவார்களென்றார் பரமசிவன்.

இவ்வாறு சண்டாள சம்பர்க்கம் ஸமூக வாழ்க்கையிலேயே தகாதென்பது ஸம்பூர்ணமாய் தடுத்திருக்க ஆகமவிதிப்படி வேதமந்த்ரங்களால் ஸ்தாபனம் பெற்றிருக்கும் மகா புனிதமான தேவாலயங்களில் சண்டாள ஸம்பர்க்கம் எப்படி சாஸ்திரங்களால் அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடும்.



முற்றிலும் தகாதென்று, ஆலயவிதிகளைக்காட்டும் சாஸ்திரமான ஆகமசாஸ்திரங்களில் அவை சைவாகமமாயிருந்தாலும் சரியே வைஷ்ணவாகமமாயிருந்தாலும் சரியே எல்லாவற்றிலும் வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது. "சோர சாண்டாள பதிதச்வோதக்யாதி ப்ரவேசனே| சவாத்யுபஹதௌசைவ பூஜாவிச்சேதனே ததா| ஸ்நாபனேனாக்தேன மார்க்கேண ப்ராயிச்சித்த சுருதி: ஸ்மிருதா" என தந்திரஸாரத்தில் ஸ்ரீ பகவத்பாதாள் எடுத்துக்காட்டியிருக்கிறார். ஜகத்பிதாவான பகவானுக்கு மக்களெல்லோரும் ஸமானர்களாதலால் சண்டாளர்களை தேவாலயத்தில் ப்ரவேசிக்காமல் செய்வது ஈசுவரஸம்மதமாகாதென்று துஷ்டயுக்திகள் கூறப்படுகின்றன. ஈச்வரனுடைய ஆக்ஞாரூபமான சாஸ்திரங்களில் சண்டாளர்களின் ப்ரவேசம் தகாதென்றும் அது ஸம்பவிக்கும்பக்ஷத்தில் அதற்குப்பிராயசித்த விதிகளும் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கும்பொழுது ஈசுவரஸம்மதமாகாதென்பது வீண்வார்த்தையேயாகும். தேவாலயங்களில் தேவதாஸாந்நித்யமே ஆகமசாஸ்திர விதிகளால் ஏற்படுகிறதேயன்றி இந்த விதானப்படி பூஜாதிகள் நடவாதிருந்தால் அங்கு தேவதாஸாந்நித்யம் குறைந்துபோகும். இவ்வாறு தேவதாஸாந்நித்யத்தை ஸம்பாதித்துக்கொடுக்கும் ஆகமசாஸ்திரமே இந்த தேவாலயங்களில் சண்டாள ப்ரவேசமாகாதென்று தடுத்திருக்கும்பொழுது சண்டாளர்களின் ப்ரவேசத்தால் பாதகமில்லை என்று துர்வாதிகள் சொல்லும் யுக்தி ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாயாகாது. தேவாலயத்தில் பிரவேசிக்கக்கூடாத நான்கு வர்ணத்தார்களைச் சேர்ந்த பதிதாதிகளுக்கும் சண்டாளர்களுக்கும் ஆலயஸ்த பகவன் மூர்த்தி சேவை ஏற்படுவதற்காகவே உற்சவாதிகள் நடத்தப்படவேண்டுமென்றும் கோபுராதிகள் உயர்த்திக் கட்டப்படவேண்டுமென்றும் பலவிதிகள் ஆகமசாஸ்திரத்தில் கூறப்பட்டிருப்பதால் ஆகமசாஸ்திரமும் சண்டாளர்களின் உத்தாரத்தை கவனியாமலிருந்து விட்டதாய் சொல்வதற்கில்லை. உற்சவத்தில் பகவானுடைய ரதத்தை இழுப்பதில் சண்டாளர்கள் கலந்துகொள்ளலாமென்றும் அப்பொழுது தீண்டாமை இல்லையென்றும் ஓர் புராணம் அறிவிக்கிறது. ஆகவே தேவாலயத்தின் ஸம்பந்தம் சண்டாளர்களுக்கு இதரவர்ணத்தார்களைப் போலில்லாமல் வேறொருவகையாய் இருந்தே வருகிறது. சமூகவாழ்க்கையில் சண்டாளர்களின் சம்பர்க்கம் குறைந்திருப்பதுபோல் தேவதாஸேவைகளிலும் அவர்களுக்கு சிறிது பாகமே விதிக்கப்பட்டிருக்கிறது. பதவிகள் உயர உயர ஈசுவரனும் அதிக உபாஸனையை எதிர்பார்க்கிறான். பிரம்மாவின் உபாஸனைக்கும் அவருக்குகுறைந்தவர்களின் உபாஸனைக்கும் தாரதம்யமுண்டு. மனுஷ்யர்களிடம் ப்ராம்மணனைவிட சூத்ரனுக்கு குறை

வாகவே விதிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதமான சண்டாளர்கள் சிறிது பகவத்ஸேவை செய்தாலும் பகவத் ப்ரீதி ஏற்படுமென்பது சாஸ்திரங்களின் அபிப்பிராயம். தவிரவும் சண்டாளர்களின் உபாஸனை தெய்வங்களான வீரன், இருளன், கருப்பண்ணன் முதலியோர் சுலபமாய் ஓர் செங்கல்லை வைத்து பக்தியுடன் சிறிது பூஜை செய்தாலும் மகிழ்கின்றனர். "யோ யோ யாம் யாம் தனும் பக்த: ச்ரத்தயார்ச்சிதுமிச்சதி। தஸ்ய தஸ்யாசலாம் ச்ரார்த்தம் தாமேவ விததாம்யஹம்" யார் யார் எந்தெந்த தேவதைகளில் பக்தி கொண்டு சிரத்தையுடன் பூஜிக்க விரும்புகிறானோ அவனுக்கு அந்த சிரத்தையை நான் திடப்படுத்திவிட்டு அந்த தேவதைகளுக்குள் நானே இருந்து அவனுடைய அபீஷ்டத்தைத் தருகிறேனென்று பகவான் கீதையில் சொல்லியபடி ஈசுவரனே இந்த ஸ்வல்ப பூஜையால் சந்தோஷப்படுகிறானெனலாம். ஆகம சாஸ்திரத்தால் தடுக்கப்பட்டிருக்கும் சண்டாள ப்ரவேசத்தைக் கைகொள்ளும் தேவாலயங்கள் ஆகமசாஸ்திரத்திற்கு விருத்தமான விதிகளைக் கைக்கொள்வதால் அப்பேர்பட்ட ஆலயங்கள் சாஸ்திரீயமான தேவஸ்தானங்களாகமாட்டாதென்று நிச்சயமாய்க் கூறலாம். ருதுமதி விவாஹம், விதவா விவாஹம், ஸமுத்ரயானம் முதலான அஸத் காரியங்கள் பொதுஜன வாழ்க்கைக்கு நன்மையையளிக்கக்கூடியதென்று தப்பாய் எண்ணி நவீனநாகரீக பித்தேறிய கல்விமான்கள் சிலர், சிறிது காலத்திற்குமுன்பு அவைகள் சாஸ்திரசம்மதமென்று கூறினால் பொதுஜனங்களில் இவை விரைவாய் பிரசாரமடையுமென்று யோசனைக் கொண்டு தாறுமாறாய் வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள் இவைகளிலிருந்து சிலவாக்யங்களை எடுத்து அவைகளுக்கு அஸம்பதமான அர்த்தங்களை கல்பனை செய்து பிரசாரம் செய்துவந்தனர். அப்பே பட்ட வழியையும் இந்த சண்டாள ஸம்பர்க்க விஷயத்தில் ஸ்ரீமான் கார்த்தி முதலியோர் பின்பற்றமுடியாமல், சிறிதளவேனும் எமது சா திரத்தில் ஆதாரத்தை எடுத்துக்காட்ட இயலாதவர்களாய், கேவலம் து சமான யுக்திவாதத்தில் மூழ்கி நான்கு வர்ணத்தார்களிலுமிருந்துவரும் எண்ணிறைந்த ஆஸ்திக மகாஜனங்கள் நாலாபக்கங்களிலிருந்தும் கூறு ஆணித்தரமான யுக்திஜாலங்களில் சிக்கி தடுமாற்றமடைந்திருக்கின்றனர். அவைகளைப்பற்றி இங்கு நாம் அதிகமாய் எடுத்துக்கூற முன்வரவில்லையாதலால் கேவலம் சாஸ்திரீயப்ரமாண நிரூபணத்துடன்மட்டில் இந்த நிரூபத்தை முடித்துக்கொள்கிறோம். விதவா விவாஹத்தைப்பற்றி சாஸ்திர ஆதாரமிருப்பதாய் ஸ்ரீமான் கார்த்தியவர்கள் நேரில் இப்பத்திரிபரிடம் 1927ம் வருஷத்தில் அறிவித்து அவரை அனுசரித்து லாகூர் விதவாவிவாகசகாயசபை காரியதரிசி அவரிடம் காட்டியபல சுருதிஸ்மிருதி வாக்யங்களுக்கு இப்பத்திராதிபர் "ஆஸ்திகப்ராம்மணன்" பத்திரிகை மூலமாய் தக்க பதிலளித்து அவைகளுக்கு இவர்கள் சொல்லும் அர்த்தம் முற்றிலும் பொருந்தாதென்பதை நன்றாய் நிரூபித்துக் காட்டியதுமன்றி விதவாவிவாஹத்தை எமது சாஸ்திரகாரர்கள் எவ்வளவு அழுத்தமாய் கண்டித்திருக்கிறார்களென்பதை வெகுவாய் விவரித்துக் கூறியிருக்கிறார். அதுபோல் இப்பொழுதும் அதே ஸ்ரீமான் கார்த்தியவர்களாவது அவருடைய கோஷ்டியினராவது இந்த சண்டாளஸம்பர்க்க விஷயத்தில் சாஸ்திர ஆதாரங்களைக்காட்டினால் அவைகளுக்கு சாஸ்திர ரீதிப்படி பதிலளிக்க சித்தமாயிருக்கிறோம். அவர்களே தங்கள் இந்த கக்ஷிக்கு சற்றும் சாஸ்திர ஆதாரமில்லை என்று ஸ்பஷ்டமாய் ஒப்புக்கொள்வதால் எமது தர்ம சாஸ்திரங்களை நம்பி வைதிகமதங்களைத் தழுவியிருக்கும் ஆஸ்திக மக்கள் யாவரும் மேற்கூறியபடிக்குள்ள எண்ணிறைந்த பிரமாண வாக்யங்களை பரிசீலனை செய்து அவர்களின் துர்வாதங்கள் காதுக்கு எவ்வளவு இனிமையாயிருந்தபோதிலும் அவைகளுக்கு மயங்காமல் எமது ஸநாதன தர்மானுஷ்டானங்களிலேயே ஈடுபட்டு கலி பாதைக்குள்ளாகாமலிருந்து தர்மாசாரணைகளுக்கு ப்ரபுவாய் அவைகளை ஸம்ரக்ஷித்து நடத்திவரும் ஸ்ரீஹரியின் கிருபாகடாக்ஷமேற்பட அரும்பாடுபடுவார்களாக.



# ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே.

முன் தொடர்ச்சி.

(6)

அநேக பக்தர்களுக்கும் ஞானம் பக்திவைராக்யம் முதலான மோக்ஷ ஸாதனங்களை அனுக்ரஹம் செய்பவரும் பலருக்கு பல வியாதிகளை சொஸ்தப்படுத்தி நாடெங்கும் கொண்டாடப் படுகிறவரும் எமது மதத்துத் தலைவருமான ஸ்ரீ குருராகவேந்திரர் முதலானவர்களை நிந்திப்பவர்கள் பித்து பிடித்தவர்களென்று அவர்களை ஒதுக்கிவிடாமல் மாத்வமித்திரனில் அவர்களின் பிதற்றலை பிரசுரம் செய்யக் காரணமென்ன? அப் பண்டிதர்களின் பெயரை ஏன் கொடுக்கவில்லை, பெயர் கொடுக்க பயப்படுகிறவர்களின் அபிப்பிராயம் பேப்பரில் எப்படி அச்சிடப்படலாம்.

இந்த பயித்தியக்காரர்களின் துர்பாஷணைகளை பிரஸித்தி செய்ததைவிட வேறொரு ஸத்விஷயம் பிரசுரித்திருக்கலாம். இந்த பயித்தியக்காரர் பண்டிதர்களுக்கு யோகாப்யாஸம் அத்யாத்ம ஞானம் தெரிந்திருந்தால் இப்படி ஒளரமாட்டார்கள். பேருக்கு பண்டிதரென்று கண்டதைப் பேசினால் அவர்களுக்கே அவமானம். ஸ்ரீ ராகவேந்திரர் மகாயோகி. தன் தேகத்துடன் ஸமாதியானவர். ஸ்ரீ ஹரிவாயு பக்தரானதால் பகவான் அவருக்கு அநேக சக்திகள் கொடுத்திருக்கின்றனர். அவரை பிசாசென்று சொல்பவன் சீக்கிரமே பிசாசு பிடித்துத் திரிவான். பிசாசு ஜன்மம் வரும்படியான மரணம் என்ன அவருக்கு நேர்ந்தது. அவருடைய பிருந்தாவனத்தினெதிரில் அநேக பிசாசுகள் ஆடுவதை நான் ப்ரத்யக்ஷமாய் பார்த்திருக்கிறேன். எனக்கே அநேக விஷயங்களில் அநேக ஸந்தர்ப்பங்களில் எவ்வளவோ அனுக்ரஹம் செய்திருக்கிறார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கொண்டாடிக்கொண்டிருக்கும் பொழுது இருவர் தூஷிப்பது சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தலைப் போலாகும். ஸ்ரீபகவத்பாதாள் பாரத தாத்பரியம் முதலிய இடங்களில் மனுஷ்யர்கள் தேவ ரகஸ்யங்களில் பிரவேசிக்கலாகாதென்று சொல்லியிருக்கிறாராதலால் ஸ்ரீஜயதீர்த்தர் எந்த தேவாம்சமானாலென்ன? அவருடைய குணங்களும் செய்கைகளும் பூஜியமானவை. ஸ்ரீபுரந்தரதாஸர் கனகதாஸர் முதலியோர் மோசக்காரர்களென்றால் யாரை என்ன மோசம் செய்தார்கள். திரவியத்தை பரித்தார்களா? புரந்தரதாஸர் நவகோடி நாராயணர். அவருடைய ஊர் இன்னமும் இருக்கிறது. எல்லாவற்றையும் தியாகம் செய்து ஸ்ரீவிட்டலனின் ஸன்னதியில் பாடிக்கொண்டிருந்தார். யாரை மோசம் செய்ய அப்படி ஆனாரென்பதை இந்த பண்டிதர்கள் சொல்லட்டும். தற்காலம் ஷோலாப்பூருக்கடுத்த முண்டேவாடி என்ற ஊரில் ஸ்ரீராமதாஸரென்ற மகான் இப்போது மகாமகிமைகளுடனிருந்துவருகிறார். இந்த பண்டிதர்கள் அவரை போய் பார்த்தால் மோசக்காரரா அல்லவா என்பது தெரியும். ஏதோ சில ஸம்ஸ்கிருத வாக்யங்களை மனப்பாடம் செய்து ஒப்பித்தால் விசேஷமில்லை. பிரம்மஞானம் அவசியம். த்யானத்திற்கு வைராக்யம் அவசியம். வைராக்யத்திற்கு காயக்லேசாதிகள் செய்யவேண்டும். பலவகை கஷ்டங்களை அனுபவித்து பகவானின் சரணமே சரணமென்று பாவித்து அனுதினம் பரிசரணம் செய்துவந்தவர்கள் தாஸர்மார்கள். ஜகந்நாததாஸரின் பாண்டித்யம் ஹரிகதாமிருதஸாரத்தால் நன்றாய் தெரியவரும் ஹரிபக்தர்களை தூஷிப்பது மகா அநர்த்தத்திற்கு காரணமே.



M. அனுமந்த ராவ்,

ரிடையர்ட் டைலிகிராப் சூபரிண்டெண்டு, ஊஞ்சலூர்.

(7)

ஸ்ரீஜயதீர்த்தாதிகள் தங்கள் பிருந்தாவனங்களில் பிசாசரூபத்துடனிருப்பதாகவும் அவர்களுக்கு வேறு தேகமிருக்கமுடியாதென்றும் கூறப்பட்டிருப்பது சுத்த பிசகு. இப்பேர்பட்ட சந்தேகம் ஏற்படாமலிருக்க மந்திராலய ஸாலாதியில் ஸ்ரீகோபாலதாஸர் கூறியுள்ளதை எல்லா தாஸர்களும் நன்கு அறிந்திருப்பதை அந்த "இருபண்டிதர்களி" ன் அக்ஞானத்தைப்போக்க இங்கு எடுத்துக்கூறுகிறேன். அங்கு காணப்படுவதாவது:— "……….. ராகவேந்த்ர ராயர சரீர போகாடி தீவ்ர பரலோககே ஸாதனே பரிபூர்த்தி மாடிகொண்டு] சேரி கிருஷ்ணன சரணக்கே எரகி சந்தோஷதலி, தரெய மேலித்த ஜனர பொரெய பேகெந்தனு] ஹரிநோடிதனு இவர பரமதயாளதனவ குரு அந்தர்யாமியாகி வரவீயலி சிரிஸஹித ஜனகே நாஹரிதானே நிந்து] நிஜுதபூஜெய கொண்டு சிரிஉள்ள கிருதிய ஸாரரபாலக சக்ரதர நாராயணனுத இவர ஸந்நிதானக்காகி இவரிகே] பலதந்தீவ இஹபரதல்லி இன்னு கருணாகர ரங்க கோபாலவிட்டல சரண பராலிஸாத்த இருதிப்பநில்லி" (4) ராகவேந்திரரெம்போ ரூபதானேயாகி, ராகவேந்திரரெம்போ நாம இடிஸிகோண்டே, ராகவேந்திர இன்னு மாடிதந்த புண்யபோகவரிது, தன்ன பாகவதரகீர்த்தி ஸாஹஸி ஈஜகதொளகெல்ல மேகசுரிதந்தே அமோக கிருதிய ராகவ இவரிகே ராஜ்யவதந்தித்த ராகவேந்திர மூர்த்தி கோபால விட்டல பாகவதரல்லி யஹா பூஜையனுகோம்ப" இதன் தாத்பரியமாவது:— ஸ்ரீராகவேந்திரர் பரலோகத்திற்கு ஸாதனங்களை ஸம்பூர்த்தியாய் செய்துகொண்டு, பின்பு தன் சரீரத்தை துறந்து ஸ்ரீகிருஷ்ணரின் பாதத்

தைச் சேர்ந்து சந்தோஷமாயிருந்து பூமியிலுள்ள ஜனங்களை அனுக்ரஹிக்கவேண்டுமென்று பகவானை கேட்க, பகவான் இவருடைய பரம தயாள குணத்தைக்கண்டு மெச்சி இவருடைய அந்தர்யாமியான பகவான் அப்படியே ஆகட்டுமென்று வரனைத்தந்து ராகவேந்திரரென்ற ரூபம் தரித்து ராகவேந்திரரெனப் பெயர் கொண்டு ராகவேந்திரர் செய்த புண்யாதிக்யத்தை நன்றாய் கண்டுகொண்டு அந்த அதிக புண்யத்திற்கு தகுந்தபடி இந்த உலகத்திற்கு அபீஷ்டங்களை வர்ஷித்துக்கொண்டு தன் பக்தர்களின் கீர்த்தியைப் பரவச்செய்கிறாரென்றார். ஆகவே ஸ்ரீஜயதீர்த்தர் முதலான மகனீயர்களின் ஸாதனஸம்பத்துக்களையும் அதிக புண்யங்களையும் கண்டு பகவானே அந்தந்த ரூபங்களுடன் அந்தந்த பிருந்தாவனங்களிலிருந்துகொண்டு அவ்விடம் சேவை செய்யும் ஜனங்களுக்கு ஆதரவுபுரிந்து அதன் மூலம் பிருந்தாவனஸ்தர்களான தங்கள் பக்தர்களுக்கு அமோக கீர்த்தியை சம்பாதித்து வைக்கிறார்.

சரித்திரத்தில் தாஸசிரேஷ்டர்களென்று புகழப்பட்டுவரும் பெரியோர்கள் பரமபகவத்பக்தர்களாயும் பண்டிதசிகாமணிகளாயும் அபரோக்ஷஞானிகளாயும் இருக்கப்பட்டவர்கள் கேவலம் விஷயா சக்தியில் ஆழ்ந்த நம்மைப்போன்ற அவிவேகிகள் அல்ல. மனோவாக்காயத்தை அடக்கி பகவத்ஆராதனையில் ஈடுபட்டவர்கள். இவர்களில் சிலர் ஸ்ரீவியாஸராஜர், ராகவேந்திரர், ஸ்ரீபாதராயர், வாதிராஜர், ஜகந்நாததாஸர் முதலியவர்கள் அளவு கடந்த பண்டிதோத்தமர்கள். சாதாரண பாட்டு கட்டின கீர்த்தனாசாரியார்களல்ல. இப்பேர்பட்ட மகனீயர்களைக் குறித்து குறிப்பிட்டதான குற்றங்களைக் காட்டாமலும் அதற்கு ஆதாரங்களைக் கூறாமலும் பொதுவாக மோசக்காரர்கள் என்று நிந்தித்தால் அவர்களுடைய பாண்டித்யத்திற்கு அழகல்ல. சூரியனைப் பார்த்து எச்சலைத்துப்பினால் எப்படியோ அப்படித்தானிது. இந்த "பண்டிதர்களுக்கு" அதிகப்படிப்பினால் மூளைக்கு பித்தம் அதிகரித்து இப்படிச் சொல்லச்செய்திருக்குமென்றே நாம் நிச்சயமாய் நம்பவேண்டும். நிதானமாய் யோசித்தபிறகு அவர்களே வருந்தப்படுவார்கள் என்று நம்புகிறேன். Fools will rush where angels fear to tread.

P. S. கிருஷ்ணமூர்த்தி ராவ்.



# செய்தித் திரட்டு.

திருநெல்வேலி ஜில்லா முதல் ஸநாதன தர்ம மகாநாடு 22-4-33 லயன்று ஸ்வயம் வ்யக்த ஸ்தலங்களில் ஒன்றாகிய தோதாத்ரி எனப்படும் நாங்கனேரியில் திருவநந்தபுரம் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி ஸ்ரீமான் K. G. சேஷய்யர் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் வெகு விமரிசையாய் நடைபெற்றதாயும் ஸ்ரீவானமாமலை மடம் சிரோமணி ஸ்ரீமான் V. T. சடகோப அய்யங்கார் அவர்கள் சபையின் பிரதிநிதிகள் முதலியோரை வரவேற்றியதாயும் தீர்மானங்களின் விபரமும் கண்டு விரிவான ரிபோர்ட்டை நமது நிருபர் அனுப்பித்திருக்கிறார். சபையின் தலைவருடைய உபன்யாஸமும் வரவேற்பு கமிட்டி தலைவரின் உபன்யாஸமும் வெகு சிலாக்யமாய் இருப்பதுடன் இக்காலத்தில் எழுந்திருக்கும் எல்லா துர்வாதங்களுக்கும் தகுந்த பதிலளிக்க கூடியதாயிருக்கிறது. முக்யமான பிரசனைகளை ஒட்டிய ஆணித்தரமான தீர்மானங்களும் செய்யப்பட்டிருப்பது மெச்சத் தகுந்ததே. ஸ்ரீ தோதாத்ரி நாதன் அருள்புரிவாராக.

ஆரணிக்கடுத்த ஸத்யவிஜயநகரத்தில் 21-4-33 சனிக்கிழமையன்று ஸ்ரீஸத்யவிஜய ஸ்வாமிகளின் புண்யதினம் கோர்ட் ஆப் வார்ட்ஸ் மானேஜ்மெண்டின் கீழ் வழக்கப்படி நடந்ததென்றும் சுமார் 300 பேர்களுக்கு பிராம்மண போஜனம் சிறிது ஆலஸ்யமாய் நடந்ததென்றும் ஸ்ரீ ஸத்யவிஜய ஸ்வாமிகள் தன் பிருந்தாவனத்திற்கு இந்த இடத்தை முன்னாடியே ஏற்படுத்திக் கொண்டு இதன் சமீபம் ஒரு நகரம் ஏற்படபோவதாய் சொன்னதற்கு தகுந்தபடி ஆரணி ஜாகீர்தாருக்கும் மதராஸ் கவர்ண்மெண்டுக்கும் ஒப்பந்தம் நடந்து சுமார் 1750 வது வருஷத்தில் இந்த ஸத்யவிஜய நகரம் ஏற்பட்டதாகவும், ஸ்ரீமூலராமரை காப்பாற்றிக் கொடுத்ததற்காக அந்த ஆரணி ஜாகீர்தார் அவர்களுக்கு அபினவ பூர்ணப்பிரிய என்ற பட்டத்தை ஷை ஸ்வாமிகள் அளித்ததாகவும், இம்மாதிரி ஆதி முதலாய் தக்ஷிண தேசத்தில் மாத்வர்களின் பிரமுகராயிருந்த ஜாகீர்த்தாருக்கு அருள் புரிந்திருக்கும் இந்த ஸ்வாமிகளின் ஆராதனையை கோர்ட் ஆப்வார்ட்ஸ் மானேஜ்மெண்டில் விட்டது அவ்வளவு யுக்தமல்லவென்றும் மாத்வர்களே முன்னின்று விசேஷ செலவு செய்யவேண்டிய அம்சங்களுக்கு செலவு செய்து பொதுவான மடத்து காரியங்களை நடத்தவேண்டுமென்றும், ஜாகீர்தாரால் செய்ய

ஸௌகரியமில்லாத சமயம் பொது ஜனங்கள் ஈடுபடுவது யுக்தமென்றும் அப்படி இனிமேலாவது அவ்வூரார் சிரத்தை எடுத்துக்கொள்ள அபே க்ஷிப்பதாயும் நமது நிரூபர் அறிவிக்கிறார்.

முசிரிக்கடுத்த உமையாபுரம் ஸ்ரீ ஆஞ்சனேயர் கோவில் நடத்தி வரும் ஸ்ரீராமநாம பஜனை சபையின் ஆதரவில் வழக்கப்படி 4—4—33 ஸ்ரீராமநவமியன்று காலையில் பஞ்சாமிருத அபிஷேகம் ஸ்ரீராமாயண பாராயணம் இரவில் பஜனை ஸ்ரீமான் வெங்கடகிரி ஆசாரியாரால் ஸ்ரீராம ஜனன உபன்யாஸம் இவைகளும் அன்றுமுதல் பத்து நாட்கள் பஜனையும் கடைசிநாள் 13—4—33உ யன்று வாத்யகோஷங்களுடன் ஊர் வலமும் நடந்ததாகவும் இவ்வுற்சவத்திற்கு உதவியளித்த பக்தகோடி களுக்கு வந்தனமளிப்பதாகவும் ஸ்ரீமான் R. ராஜகோபால ராவ் அறி விக்கிறார்.

திருநெல்வேலியிலிருக்கும் புதூர் ஜமீன்தார் ஸ்ரீமான் கிருஷ்ணராவ் அவர்களின் பாடசாலையில் மாத்வவித்யார்த்திகள் கிடைக்காததால் தற்போது 10 ஸ்மார்த்தர்களும் அவர்களிலும் பூராஸம்ஸ்கிருதம் வாசிப்ப வர்கள் கிடைக்காததால் ஸ்கூலில் ஸம்ஸ்கிருதம் எடுத்துக்கொண்ட வித்யார்த்திகளிருக்கின்றனர். மாத்வவித்யார்த்தி ஒருவர்தான். தற் போது அதன் பரிபாலகர்கள் (1) T. S. ஸ்ரீனிவாஸராவ் B.A., B.L., (2) A. K. கிருஷ்ணஸ்வாமிராவ் B.A., B.L., (3) A. K. ராமச்சந்திர ராவ் என்று கௌலகி யதுநாதாசாரியார் அறிவிக்கிறார்.

---

## விசேஷதினங்கள்.

### ஜ்யேஷ்ட மாஸம்.

| | | |
|---|---|---|
| 4—6—33 | பானுவாரம் | ஏகாதசி உபவாஸம். |
| 7—6—33 | புதவாரம் | ஸ்ரீபாதராஜர் புண்யதினம். |
| 8—6—33 | குருவாரம் | பௌர்ணமி, வடஸாவித்ரிபூஜை, விஷ்ணுபு. உப. |
| 12—6—33 | சோமவாரம் | சிரவணம், உப. விஷ்ணுப்ருங்கல உப. |
| 18—6—33 | பானுவாரம் | ஏகாதசி உப. |
| 20—6—33 | மங்களவாரம் | ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகள் புண்யதினம். |
| 22—6—33 | குருவாரம் | அமாவாஸை விஷ்ணு உப. |

208705

ஸ்ரீமத்வம... ...மான தமிழில் சரியான
படி போதிப்பதில் ...யறறது. மடாதிபதிகள்பண்டி
தர்கள் பட்டதாரிக... ...ள மிட்டாதாரர்கள் முதலியவர்கள்
யாவரும் இப்பத்திரிகை... ...லாகிப்பால்தான் தமிழ்நாடெங்கும்இது
சந்தாதாரர்களைக்கொண்டுள்ளது. பத்திரிகையின் வாயிலாய் ஸ்ரீமத்வ
மதத்தை அறியவிரும்புகிறவர்கள் இபத்திரிகைக்கே சந்தாதாரராய்ச்
சேருங்கள். இதன் வருடசந்தா முன்னம் ரூ. 3. பழையபிரதிகள்
விலைக்கு கிடைக்கும். இது பிரதிபௌர்ணமியிலும் கும்பகோணத்திலி
ருந்து வெளியாகிறது. பத்திரிகைசரியானபடி கிடைக்காவிட்டால்
பௌர்ணமி கழிந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே நமக்கு அறிவிக்கவேண்
டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கு அறிவித்துவிடவேண்டும். பிறகு
எழுதினால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல. பதிலறிய விரும்புகிறவர்கள்
ஸ்டாம்பை அனுப்பவேண்டும். போஸ்டாபீசின் பெயரை இங்கிலீஷில்
சரியான ஸ்பெல்லிங்குடன் எழுதியனுப்பவேண்டும். ஒவ்வொருகடி
தத்திலும் தெளிவாய் மேல்விலாஸமறிவிக்கப்படவேண்டும்.
மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

பாதிவிலை! பாதிவிலை!!

## சொற்பகாலத்திற்குத்தான்.

மாத்வமித்திரன் வாசகர்களுக்குமட்டில் மாத்வமித்திரன் பிரசாரமடைய அன்புடன் இவ்வாறுகுறைக்கப்பட்டிருக்கிறது.

## அபூர்வ நாடகங்கள்.

துருவா (ஸ்ரீமான் பாகவதரங்கனுதாசாரியார் ஆசிரியர் 0—6—0
உஷாபரிணயம் (ஸ்ரீமான் A. R. ராஜகோபால
செட்டியார்பதிப்பாசிரியர் 0—4—0
சக்குபாய் ஷை 0—4—0

தபாற்கூலி வேறு. மேற்கண்ட புஸ்தகங்கள் எமது ஆபீ
ஸில் கிடைக்கும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர்பாட்டில் ரூ 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும் ஓர் டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்

PEREIRA & Co., Chemists No.1 3, Calicut. (S. India)

# டி. ஆர். அண். கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 | தந்திவிலாஸம் "கோகுல்"

**எங்கள் வாஸனாதிரவியசாலையில்**
**தயாரித்து விற்பனைக்குதயாராக**
**இருக்கும் ஸாமான்களின் விபரம்**

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

**சந்தனாதித்தைலம்**

**அரைக்கீரைவிதைத் தைலம்.**

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கு

**கேட்லாக்குக்கு எழுதுங்கள்**

Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbak